பக்கங்கள் :எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 26 சனிக்கிழமை (09.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 192

## தமிழர்கள் வெளியேற்றப்பட்டதற்குப் பொறுப்பான பொலிஸ்மா அதிபர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

### ஜனாதிபதி உத்தரவிட்டதாகத் தகவல்

கொழும்பு, ஜூன் 9

தமிழர்களைக் கொழும்பிலிருந்து பலவந்தமாக வெளியேற்றியமைக்குப் பொறுப்பான பொலிஸ் மாஅதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று உத்தரவிட்டார்.

தமிழர்களைக் கொழும்பிலிருந்து வெளியேற்றும் செயற்பாட்டில் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு மேலதிகமாக நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்துப் பூரண விசாரணைகளை நடத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருக்கிறார்.

எந்த அரசாங்க உத்தியோகத்தர் தமது அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தாலும் அவர் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அலுவலகம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மனைவி விடுங்கோ விடுங்கோ எனக் கதறி அழ...

## சிறுநீரக நோயாளியை இழுத்துச் சென்று பஸ்ஸில் ஏற்றிய பொலிஸார்

கொழும்பு, ஜூன் 9

கடந்த வியாழக்கிழமை கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்களை பஸ்களில் தமிழர் மாவட்டங்களுக்குப் பலவந்தமாகக் கூட்டிச் சென்ற போது, பொலீஸாரும் படையினரும் மனிதாபிமானமற்ற முறையில் கர்ணகொடூரமாக நடந்து கொண்டனர் என்ற தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

அந்த அடாவடித்தனத்துக்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல, சிறுநீரக மாற்றுச் சிகிச்சை மேற்கொண்டுவிட்டு விடுதி ஒன்றில் தங்கியிருந்த நோயாளி ஒருவர் அவரது படுக்கையில் இருந்து இழுத்துச் சென்று பஸ்ஸில் ஏற்றப்பட்டிருக்கின்றார்.

தமது கணவர் கொழும்பில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய தேவை இருப்பதாக அவரது மனைவி அவரை

(08ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரைக் கொழும்பிலிருந்து பலவந்தமாக வெளியேற்றும் அரசின் நடவடிக்கைக்கு உயர் நீதிமன்றம் நேற்றுத் தடை!

## தலைநகர் செல்வோரை தடுக்கக்கூடாது எனவும் உத்தரவு

கொழும்பு, ஜூன் 09

**கொழும்பில் வசிக்கும் தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றுவதற்கும், கொழும்புக்குத் தமிழர்களை வரவிடாமல் தடுப்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை விடுத்தது.**

**மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்று முற்பகல் விடுத்தது.**

இந்த விவகாரம் தொடர்பாக நேற்றுக் காலை தாக்கல் செய்யப்பட்ட மனுவை, உடனடியாகவே பரிசீலனைக்கு எடுத்து, இந்த உத்தரவை உயர்நீதிமன்றம் விரைந்து விடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

'மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின்' சார்பில் இந்த மனுவை சட்டத்தரணி மோகன் பாலேந்திரா நேற்றுக் காலை தாக்கல் செய்தார். சிரேஷ்ட சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மனு. சார்பில் ஆஜராகி வாதாடினார்.

நீதியரசர்கள் நிமால் திஸநாயக்கா, நிமால் காமினி அமரதுங்க, அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோர் முன்னிலையில் மனு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவில் எதிர்மனுதாரர்களாக பொலிஸ்மாஅதிபர்மற்றும் வெள்ளவத்தை, புறக்கோட்டை, கொட்டாஞ்சேனை, வத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், இராணுவத்தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சட்டமா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த மனுவைப் பரிசீலித்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அமைச்சர் வருகிறார்

கொழும்பு, ஜூன் 9

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டாக்டர்கிம் ஹவால்ஸ் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு வருகிறார்.

அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச்சந்தித்துப்பேச்சுநடத்த இருக்கிறார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அதிகரித்துவரும் மோதல்கள் தொடர்பாக அமைச்சர் ஹவால்ஸ் கவனம் செலுத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் கிம் ஹவால்ஸ் சந்திப்பார்.(சி)

## சக்திவாய்ந்த கிளைமோர் மாளிகாவத்தையில் மீட்பு!

கொழும்பு, ஜூன் 9

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் சக்திவாய்ந்த கிளைமோர் கண்ணிவெடி ஒன்றை நேற்றுக்காலை தாம் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்திருக்கின்றனர் என்று பொலிஸார் அறிவித்திருக்கின்றனர்.

மாளிகாவத்தை பாரன்ஜயதிலக்க மாவத்தையில் இருந்தே 7 கிலோகிராம் நிறையுடைய கிளைமோர் குண்டு ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பிமலைக் காட்டில் வெடித்தது கடுஞ் சமர்!

கொழும்பு, ஜூன் 09

மட்டக்களப்பு மாவட்டம், குடும்பி மலைக் காட்டுப் பிரதேசத்தில் புலிகளின் காட்டுப் பகுதிக்குள் இலங்கை இராணுவத்தினர் மூன்று முனைகளில் நேற்றுக் காலை 5.30 மணியளவில் முன்னேற முயன்றபோது அங்கு கடும் சமர்வெடித்ததாக இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

ஈரக்குளம், பள்ளமடு, புதுமானோடை ஆகிய முனைகளில் முன்னேறமுயன்ற படையினர் புலிகளின் முன்னரங்கப் பகுதிகளில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டனர்.

காயமுற்ற 11 படையினர் பொலன்னறுவை வைத்தியசாலைக்கு ஹெலி மூலம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நகரப்பகுதியைச் சுற்றி விமானங்கள் தாழப்பறந்து தாக்குதல்

### மக்கள் பதற்றம்! இயல்புநிலை குழப்பம்

கிளிநொச்சி, ஜூன் 9

கிளிநொச்சிக்கு தெற்குப் புறத்தில் நேற்று இருதடவைகள் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

இலங்கை விமானப்படையின் ஐந்து விமானங்கள் கிளிநொச்சி நகரை உள்ளடக்கிய பிரதேசங்கள் மீது பெரும் இரைச்சலுடன் தாழப்பறந்து வட்டமடித்தவாறு தாக்குதலை நடத்தின என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

காலை 7.40 மணிக்கும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரை வெளியேற்றிய நடவடிக்கை: கண்டித்து அமெ. தூதரகம் அறிக்கை

கொழும்பு, ஜூன் 9

இலங்கையில் மக்களைப் பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கையை உடன் நிறுத்தும்படி இலங்கை அரசைக் கேட்டிருக்கின்றது அமெரிக்கா.

''தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றும் செயற்பாட்டை அமெரிக்கா கண்டிக்கின்றது'' - என்ற தலைப்பில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கேட்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்பிலிருந்து தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றுவதை அமெரிக்கா கண்டிக்கின்றது.

இலங்கைக்குள் எங்கும் நடமாடுவதற்கும், எப்பகுதியிலேனும் வசிப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்கும் இலங்கை அரசமைப்பு மூலம் ஒவ்வொரு பிரஜைக்கும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சுதந்திரத்தை இத்தகைய நடவடிக்கை மீறுகின்றது.

பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்படுவதற்கு இலங்கைக்கு உள்ளகடப்பாட்டை தமிழரை அமெரிக்கா புரிந்து கொண்டுள்ளதோடு அதைஆதரிக்கவும் செய்கின்றது.

ஆனால் -

இலங்கையின் ஏறத்தாழ கால் நூற்றாண்டு காலப் பிரச்சினைக்கு தேசிய நல்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே, ஐரோப்பிய ஒன்றியமும் கண்டிக்கின்றன

கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களை மீறும் ஒரு செயலாகும்.

இவ்வாறு இலங்கை அரசைக் கண்டித்திருக்கின்றது நோர்வே அரசு.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் இது குறித்து வெளியிட்டுள்ள செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கைப் பொலிஸ் துறையினரின் இந்த நடவடிக்கையானது அகில உலக மனித உரிமைச் சட்டங்களை மீறுகின்ற ஒரு செயலாக அமைந்திருக்கின்றது. இத்தகைய ஒடுக்கல் செயற்பாடுகளானது தமிழர்களை மட்டுமல்ல எந்தவொரு இனத்தின்மீதும் மேற்கொள்ளப்படுதல் மனித உரிமைச் சட்டங்களுக்கு எதிரானது என

(08ஆம் பக்கம் பார்க்க)

## அழுகிய 9 சடலங்கள் வென்னப்புவவில் மீட்பு!

கொழும்பு, ஜூன் 9

வென்னப்புவ பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தும்மலகெலே சதுப்பு நிலப் பகுதியில் - ஒதுக்குப்புறமான இடம்ஒன்றில் - அழுகி உருக்குலைந்த ஒன்பது சடலங்களை பொலிஸார் மீட்டிருக்கின்றனர்.

வென்னப்புவ பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸ் குழு ஒன்று நேற்றுப் பகல் இந்த சடலங்கள் போடப்பட்டிருந்த இடத்தைக் கண்டுபிடித்தது. அப்பகுதியில் குப்பைமேடு போன்று காட்சிதரும் மற்றொரு இடத்திலும் மேலும் சடலங்கள் மறைந்து கிடக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கொலையுண்டோர் பல நாள்களுக்கு முன்னர் கொல்லப்பட்டு அப்பகுதிக்கு கொண்டு வந்து வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு அழுகி உருக்குலைந்து காணப்படுகின்றன என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் நடத்துநரைக் காணவில்லை; கண்டித்து ஊழியர் பகிஷ்கரிப்பு

### பஸ்சேவைகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியில் நேற்றுமுன்தினம் காணாமற்போன வடபிராந்திய போக்குவரத்துச்சபையின், நடத்துநர் [illegible]ம். பிரதீபனை விடுவிக்குமாறு கோரி போக்குவரத்துச் சபை ஊழியர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போராட்டம் காரணமாக நேற்று நண்பகல் 12 மணியுடன் யாழ். டிப்போவைச் சேர்ந்த பஸ்கள் தமது சேவைகளை நிறுத்தின என்றும் -

காரைநகர், பருத்தித்துறை சாலைகளில் பஸ் சேவைகளும் இன்று நிறுத்தப்படும் என்றும் -

போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தீவகத்தில் இரவில் தங்கி நின்று காலையில் சேவையில் ஈடுபடும் பஸ்களைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இரவில்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் துணை

# 13ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



மலேசியாவில் தவப்பேறு
11.01.1960

சிவபூமியில் சிவப்பேறு
03.06.1994

திதி:
09.06.2007

**திருமதி ஞானலக்ஷ்சுமி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**

(B.A.(Hons), Eng. Trd - ஆங்கில ஆசிரியர்)

''இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே''

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி,
28, கைலாசபிள்ளையார் வீதி,
நல்லூர்.

கணவர், சகோதரி, மாமி,
மைத்துனர், மருமக்கள்,
பெறாமக்கள், உறவினர்.

# நான்காம் ஆண்டு நினைவலைகள்



கலாவித்தகி
திருமதி
**மேகலா வசந்தகுமார்**
BA(HONS), Dip.in.Edu
*(ஆசிரியர், யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை)*

மலர்வு
02-04-1966

உதிர்வு
24-05-2003

*திதி: நவமி (09-06-2007)*

**காலமெலாம் நீயிருந்து எம்மை
கலங்காமல் காத்திருப்பாய் - என்றிருக்க
கண்ணீரால் விடைதந்து கலங்கவைத்து
கடவுளடி சென்று நான் காண்டானதோ....!**

இல.61/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (61449)

உங்கள் பிரிவால் துயருறும்:
ஆரைமக்கள், அன்புக்கணவர்,
பாசமிகு குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவபாக்கியம் செல்லப்பா

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, டச்சுறோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சிவபாக்கியம் நேற்று (08.06.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் செல்லப்பாவின் மனைவியும் செல்வரஞ்சன் (சுவிஸ்), ரஜனி (ஜேர்மனி), ராசேந்திரம் (அளவெட்டி-மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயும் அருணாம்பிகை (சுவிஸ்), ரவீந்திரன் (ஜேர்மனி), சுமதி ஆகியோரின் அன்பு மாமியும் சிந்துசஜான (சுவிஸ்), சுவாதிகா (சுவிஸ்), செந்தூரன் (ஜேர்மனி), ரதீபன் (ஜேர்மனி), அபர்ணன், தக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2007) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சுறோட்,
அளவெட்டி. (61472)

தகவல்:
செ.செல்வரஞ்சன்,
செ.ராஜேந்திரன்.
(மகன்மார்).

## ஆனந்தசாவித்திரிதேவி சிவலோகநாதன்

மந்துவிலை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சி.ஆனந்தசாவித்திரிதேவி நேற்று (08.06.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - விஜயசிவகாமசௌந்தரி தம்பதியரின் மூத்தமகளும், காலஞ்சென்ற சிவலோநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற Dr.வள்ளிகாந்தன், சிவலோகதேவி, பாத்திமாஷாமிலா (பாப்பா) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற நரேந்திரநாதன் (லண்டன்), காயத்திரிதேவி (அமெரிக்கா), காலஞ்சென்ற மாயத்திரிதேவி, Dr.ஸ்ரீஜயதேவி, கதிராய்தேவி, காலஞ்சென்ற பூபேந்திரநாதன் ஆகியோரின் சகோதரியும் லோகேஸ்வரன், ஷாலி ஆகியோரின் அன்பு மாமியும் சுகந்தி முகுந்தன், ஜெயந்தி சீதபொன்கலன், ரவிகாந்தன் அமுதா, பிரியந்தி ரமணிகரன், திவ்வியகாந்தன் பிரசாந்தி, அலிஹம்சா ஆகியோரின் பேர்த்தியும் பிரணவவிநாயகன், ஹரிணி, நாராயணி, சாயிவும்மீலி, மசிந்தன், யதுநந்தன், சஞ்சய், ஷிவானி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.06.2007) வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம். (61464)

தகவல்:
பொ.லோகேஸ்வரன்.
(மருமகன்)

# வீட்டின் மீது இரவில் கைக்குண்டு வீச்சு

யாழ்ப்பாணம்,ஜூன் 9

சுன்னாகம் கோவில் பகுதியில் இரவு நேரத்தில் கைக்குண்டு வீசப்பட்டது.

குண்டுவெடிக்கவில்லை என்றும் வீட்டின் அஸ்பெஸ்ரஸ் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து வீட்டுச்சொந்தக்காரர் இராணுவத்தினருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் அங்குசென்று குண்டைச் செயலிழக்கச் செய்தனர் என அறிய வந்தது.

(அ)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



விஜய், அசின், வடிவேல் நடித்த
(நீல்ஸ்)
போக்கிரி
தினசரி : 11மணி, 3மணி.
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் இறுதி வாரம்

## வீடு வாடகைக்கு

மாட்டின் வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 53, மாட்டின் வீதி (வேல்ட் விசன் அருகில்) யாழ்ப்பாணம்.
பார்வையிடும் நேரம் 9-4 மணி வரை 10.06.2007 ஞாயிற்றுக்கிழமை

யாழ்.மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

## அறிவித்தல்

எதிர்வரும் 10.06.2007 ஞாயிற்றுக்கிழமை முதல் 450 கிராம் நிறை கொண்ட ஒரு இறாத்தல் பாணின் சில்லறை விற்பனை விலை ரூபா 33 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

செயலாளர்.

மனோகரா யாழ்ப்பாணம்



சிவாஜி
15.06.2007 முதல்
சுப்பர்ஸ்டார் ரஜனிகாந், ஸ்ரேயா, விவேக் மற்றும் பலர் நடித்த
காட்சி நேரம்: காலை -7, 10.30, மாலை 2.30

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், கார்த்திகை 4ஆம் பாதம், கிரகபாவம் 14, வயது 37 உடைய B.Sc., M.Sc. ஆசிரியருக்கு அழகான மணமகள் தேவை. தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 6006579
*செழியன்,*
*மானிப்பாய் வீதி, மானிப்பாய்.*
(61457)

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ஏனைய குருகுல அமைப்புகளுடன் இணைந்து நடத்தும் அமரர் சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்களின் நினைவஞ்சலிக் கூட்டம்**

காலம்: இன்று (09.06.2007) சனிக்கிழமை பி.ப 1 மணி
இடம்: தலைமைச் செயலகம், குருகுலம், ஆனைப்பந்தி

தலைவர்: *பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஸ்ணஐயர் (வாழ்நாள் பேராசிரியர், யாழ்.பல்கலைக் கழகம்)*

நினைவுப் பேருரைகள்

நூல்வெளியீடு: முகூர்த்த நிர்ணயம்

நன்றியுரை: பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாச்சாரியார்
*(சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்)*

**அனைத்து அந்தணப் பெருமக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்**

சர்வதேச இந்துகுருமார் ஒன்றிய குருகுல கலாசாலை வகுப்புகள் மீண்டும் சர்வசித்து வருடம் வைகாசித் திங்கள் 28 ஆம் நாள் திங்கட்கிழமை (11.06.2007) காலை 9 மணியளவில் அநேக அந்தணப் பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

வைதீக வகுப்புகள் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தா.மாகாதேவக்குருக்கள் அவர்களாலும் ஆகம வகுப்புகள் பிரம்மஸ்ரீ ப.ராஜகோபால சர்மா அவர்களினாலும் நடத்தப்பட இருக்கின்றன. கூடிய விரைவில் ஏனைய வகுப்புகளும் ஆரம்பமாகும். தொடர்ந்து வடமராட்சி, தென்மராட்சியிலும் வகுப்புகள் ஆரம்பமாகும்.

அனைத்து மாணவர்களையும் தங்கள் கல்வியை தொடருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சர்வதேச இந்துமத
குருமார் ஒன்றியம்.

## SYMPATHIES



We Express our deep Sympathies on the death of the late
Mrs.Thavamany Balasingham
beloved mother of
**Mr.B.Mahendirakumar**
*Treasure of the Uduvil YMCA*

Y.M.C.A

(61453)

**Uduvil YMCA**

# துயர் ஆறா ஆறாம் ஆண்டில்

அமரர்
**G.செபஸ்ரியாம்பிள்ளை**
(G.S.Pillai)
(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்ரர்)



பிறப்பு: 13.01.1938
இறப்பு: 09.06.2001

*அப்பா,
ஆறாத்துயரில் நாம் மூழ்கி
ஆண்டுகள் ஆறு ஆயினவே
ஆறாது எம் துயர் ''அப்பா''
அயராது எம் விழிகள்
ஆண்டுகள் ஆயிரமாயினும்.*

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (09.06.2007) சனிக்கிழமை ஆனைக்கோட்டை, புனித அடைக்கலநாயகி ஆலயம், வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயம், புனித வின்சன் டி போல் ஆலயம், சாளட் U.S.A. சென்.மைக்கல் ஆலயம், மிடில்செக்ஸ், லண்டன் ஆகிய ஆலயங்களில் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

54/2/1, இராயசிங்கம் வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06. (61448)

*ஆறாத்துயரில்:*
மனைவி, பிள்ளைகள், மருமகள், மைத்துனர், உற்றார், உறவினர், அருட்திரு S.A.றொஷான் *(மகன்)*.

# மரண அறிவித்தல்கள்

## நாகமணி அருளானந்தம்



சிவன்கோயிலடி, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகமணி அருளானந்தம் (ஓய்வு பெற்ற சாரதி PWD) நேற்று (08.06.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னர் நாகமணி- மாணிக்கம் தம்பதியரின் புதல்வனும் திலகவதியின் அன்புக் கணவரும் கோணேஸ்வரன் (பொறியியலாளர், கட்டட ஒப்பந்தகாரர் -RDA வவுனியா), குகனேஸ்வரன் (பிரான்ஸ்), செல்வேஸ்வரன், செல்வரஞ்சன், நிர்மலானந்தன், ஞானரஞ்சி ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2007) சனிக்கிழமை மு.ப.8 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயிலடி,
வட்டுமேற்கு.

தகவல்:
செல்வேஸ்வரன் (செல்வம்- மகன்).

## பாக்கியலட்சுமி பரமசிங்கம்பிள்ளை



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது வவுனியாவில் வசித்தவருமான பாக்கியலட்சுமி பரமசிங்கம்பிள்ளை நேற்று (08.06.2007) வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமசிங்கம்பிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, தவமணி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற தேவராஜா,உலகநாதன், தனபாலன் ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, புனிதவதி மற்றும் திருநாவுக்கரசு, குணபூசணி ஆகியோரின் அருமைச் சகோதரியும் கோபாலபிள்ளை, கண்மணி, உலகநாதன் ஆகியோரின் அருமை மைத்துனியும் அச்சுதநாத், பிரசன்னன், தனசங்கர், மாதங்கி, செந்தூரன், பிரதாயினி, சிவாஜினி ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் இன்று (09.06.2007) சனிக்கிழமை பி.ப 3 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5/2, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
சரஸ்வதி - தனபாலன்.

## திருமதி வரதலட்சுமி நாகராசா



புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 283/13, புகையிரத வீதியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி வரதலட்சுமி நாகராசா 07.06.2007 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் நாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் இராசம்மா தம்பதியரின் மருமகளும் ஜெயதீபன், தினேஸ்குமார், சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆனந்தபகீரதியின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, சந்திரமூர்த்தி, தெட்சணாமூர்த்தி மற்றும் நடேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி, புனிதவதி, மங்களேஸ்வரி,மனோகரன், ரதீஸ்வரி, காலஞ்சென்ற மனோரஞ்சன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

283/13, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி தெட்சணாமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சமூகத்தின் சிவில் உரிமையை அடியோடு நசுக்கும் அத்துமீறல் இது!

## சுதந்திர ஊடக இயக்கமும் சீற்றம்

கொழும்பு,ஜூன் 09

கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழர்கள் பலவந்தமாக ஏற்றி அனுப்பப்படுவதை சுதந்திர ஊடக இயக்கம் சீற்றத்துடன் கண்டித்திருக்கின்றது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் அடிப்படை உரிமைகள் மற்றும் ஜனநாயக ஆட்சியைப் பேணுவதில் திடசங்கற்பம் கொண்டுள்ள அமைப்பு என்ற வகையில், சுதந்திர ஊடக இயக்கம் தற்போது கொழும்பு விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழர்களை வெளியேற்றும் அரசின் நடவடிக்கை தொடர்பாக மௌனம் பேண முடியாத நிலையில் இருக்கின்றது.

நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிறிய முன்னறிவித்தலுடன் அல்லது முன்னறிவித்தலேயின்றி பஸ்களில் பலவந்தமாக ஏற்றப்பட்டு யுத்தத்தில் மூழ்கியுள்ள வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்குப் பலவந்தமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுகின்றார்கள். சுகவீனம் காரணமாகத் தங்கியிருந்தோரும், பயணிக்க முடியாத உடல் நிலையில் இருந்தோரும் கூட விரட்டப்படுகின்றனர்.

வெறுக்கத்தக்க இந்த நடவடிக்கை ஜனநாயகப் பண்புகளைச் சீரழிக்கின்றது. தமிழ்ச் சமூகத்தின் சிவில் உரிமைகளை அடியோடு மீறுகின்றது. இத்தகைய கோட்பாட்டை சுதந்திர ஊடக இயக்கம் தெளிவாகக் கண்டிக்கிறது.

இத்தகைய இனச் சுத்திகரிப்புச் செயற்பாடு இந்த அரசினால் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யமுடியாது என்ற கருத்தையே மேலும் உறுதிப்படுத்தும் - என்றுள்ளது. (உ)

# பாதுகாப்புத் தேடிவந்த தமிழரை பஸ்ஸில் ஏற்றி அனுப்புவதா?



## மனித உரிமை மீறல் என்கிறார் ஹக்கீம்

"யுத்தம் நடைபெறும் பிரதேசங்களைவிட கொழும்பு பாதுகாப்பான இடம் என்று தஞ்சம்கோரிவந்த தமிழர்களைப் பலவந்தமாக மீண்டும் அங்கே திருப்பி அனுப்புவது அப்பட்டமான மனித உரிமை மீறல்களாகும்"

- இவ்வாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் கண்டனம் தெரிவித்தார்.

தலைநகரில் இருந்து அப்பாவித் தமிழர்கள் வெளியேற்றப்படுவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் உரையாற்றும்போதே ரவூப் ஹக்கீம் இப்படிக் கூறினார்.

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவேண்டிய நிலையில் இன்று இப்படியான ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது மேலும் துப்பாக்கியமானது.

தமிழர்களுக்கு கொழும்பு சொந்தம் இல்லை என்றால், வடக்கு, கிழக்கு தமிழர்களுக்குச் சொந்தம் என்பதை அரசு ஊர்ஜிதப்படுத்திவிட்டதா?

அரசே தமிழ்ப் பிரதேசத்தை அங்கீகரிக்கின்றதா?

1983ஆம் ஆண்டில் தமிழர்கள் கொலை செய்யப்பட்டதும், அவர்களது உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டதும் விரட்டியடிக்கப்பட்டதும் காடையர்களினாலும் குண்டர்களினாலும்தான்.

ஆனால், இன்று அப்பாவித் தமிழர்கள் அரச அங்கீகாரத்துடன், அரச படையினரால் மிரட்டி அனுப்பப்பட்டுள்ளனர். இது எந்த ஓர் மனிதாபிமானம் உள்ள மனிதனாலும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இது பொறுப்புள்ள ஒரு அரசு செய்யும் செயலாகாது - என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார். (க-01)

# தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை; பல்வேறு தரப்புகளும் கண்டனம்

### புளொட் கண்டனம்

கொழும்பு விடுதிகளில் தங்கியிருக்கும் வடக்கு - கிழக்கு மக்களை பலாத்காரமாக அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கும் பாதுகாப்புத் தரப்பினரின் நடவடிக்கையை புளொட் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

இது தொடர்பாக அது வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமது சொந்த அலுவல்கள் நிமித்தமும் தத்தமது இடங்களில் பாதுகாப்புடன் வாழமுடியாத சூழலிலும் கொழும்பு வந்து விடுதிகளில் தங்கியிருக்கும் வடக்கு, கிழக்கு மக்களை - குறிப்பாக இள வயதினரை பலாத்காரமாக வெளியேற்றி வடக்கு, கிழக்கிற்கு அனுப்பிவைக்கும் முயற்சிகளில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர் என அறியமுடிகின்றது. இவ்வாறான நடவடிக்கை மனித உரிமை மீறல்களின் உச்சமாகவே கருதமுடியும்- என்றுள்ளது.

### தமிழ் காங்கிரஸ்

விடுதிகளில் தங்கியிருந்த அப்பாவித் தமிழர்களைப் பலவந்தமாகக் கைதுசெய்து பஸ்களில் ஏற்றிச்சென்றமை பொலிஸாரின் மிலேச்சத்தனமான செயல் என்று கண்டித்திருக்கின்றது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

அக்கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி இது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

வயோதிபர்கள், நோயாளிகள் உட்படப் பல தமிழர்கள் நள்ளிரவில் லொட்ஜ்களிலிருந்து பலவந்தமாகப் பொலிஸாரினால் வெளியேற்றப்பட்டமையை அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

இவ்வாறு செயற்பட்டதன்மூலம் விடுதிகளில் வசிக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பொலிஸார் மீறியுள்ளனர்.

### இ.தொ.கா. கண்டனம்

இலங்கைவாழ் மக்களின் மனித உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்டுவரும் சூழ்நிலையில் பலவந்தமாக தமிழர்கள் தலைநகரிலிருந்து வெளியேற்றப்பட்டமை கண்டனத்துக்குரிய செயலாகும்.

- இவ்வாறு இ.தொ.கா. விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒருபுறம் தாம் நாட்டைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பை அரசு உதாசீனப்படுத்துவது நியாயமானதல்ல. இதற்கு அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்.

இந்நிலையை அரசு கவனத்தில் எடுத்து தமிழர்களின் ஜனநாயக, மனித உரிமைகளுக்கு உரிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### இடதுசாரி முன்னணி

"கொழும்பிலுள்ள விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள். பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட இந்தச் செயல் மனித உரிமை மீறலின் உச்சக்கட்ட வெளிப்பாடாகும்"

- இவ்வாறு இடதுசாரி முன்னணியின் பிரசாரச் செயலாளர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனநாயகத்தை விரும்புகின்ற அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து குரலெழுப்பவேண்டும். மஹிந்த அரசு தவறான ஒரு பாதையைத் தெரிந்தெடுத்திருக்கின்றது. மனித நாகரிகம் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு இலங்கையில் சம்பவங்கள் நடந்தேறுகின்றன.

இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கு எதிராக இடதுசாரி முன்னணி நடவடிக்கை எடுக்கும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆனந்தசங்கரி

"விடுதலைப் புலிகளுக்குப் பயந்து கொழும்பு வருவோரை இங்குள்ள பாதுகாப்புத் தரப்பு மீண்டும் பழைய இடத்திற்குப் போ என்றால் அவர்கள் எங்கே போவது. கடலுக்குள்ளே போய் வீழ்வதா?"

- இப்படிக் கேட்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்பு லொட்ஜ்களிலிருந்து தமிழர்களை மனிதாபிமானம் அற்ற முறையில் வெளியேற்றியிருப்பது மிகப்பெரிய மனிதஉரிமை மீறலாகவும் முட்டாள்தனமான செயலாகவும் கருதவேண்டும்.

இத்தகையதொரு கொடூரமான செயலை நான் இதுவரை பார்க்கவில்லை - என்றுள்ளது.

### அடைக்கலநாதன்

"யுத்தமின்றி இரத்தமின்றி தமிழீழத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று ஜனாதிபதியே வடக்கு, கிழக்கை எம்மிடம் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார். அதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம்"


- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து தமிழர்கள் கட்டாயமாகக் கடத்தப்படுவது தொடர்பான விசேட விவாதத்தில் உரையாற்றும்போதே இப்படிக் கூறினார்.

# உலகக் கிரிக்கெட் அரங்கில் சூடு பிடிக்கும் பயிற்சியாளர் பதவி


பெய்லிஸ்


கிரஹம்


வட்மோர்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி முடிவடைந்து நீண்டநாள்கள் கடந்துவிட்டன. ஆயினும் அந்தப் போட்டிகளில் பங்கேற்ற அணிகள் தொடர்பான - அணிகளின் பயிற்சியாளர்கள் தொடர்பான-விமர்சனங்களும் கருத்து மோதல்களும் இன்னும் ஆறிப்போகவில்லை.

உலகக்கிண்ணப் போட்டிகளில் சோபிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட அணிகள் சில வாய்ப்புக்களைக் கோட்டைவிட, எதிர்பாராத சில அணிகள் காலிறுதி, அரையிறுதிப்போட்டிகளில் முத்திரை பதித்துவிட்டுச் சென்றுள்ளன.

## விளையாட்டு

குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான் அணிகள் போட்டியின் ஆரம்பத்திலேயே வெளியேறியமையால் சற்று விறுவிறுப்புக் குறைந்ததாகவே போட்டிகள் அமைந்தன.

இதனடிப்படையில் தற்போது சூடு பிடித்திருப்பதுதான் கிரிக்கெட் அணிகளின் பயிற்சியாளர்கள் விவகாரம்.

ஓர் அணியின் வெற்றி தோல்விகளுக்குப் பின்னால் காரணகர்த்தாவாக - சிம்மசொப்பனமாகத் திகழ்பவர்தான் அந்த அணியின் பயிற்றுவிப்பாளர். அணியின் எழுச்சி, வீழ்ச்சி என்பனவற்றில் கணிசமான பங்கு அவருக்கும் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அந்தவகையில் பலமுக்கிய அணிகள் தமக்குப் புதிய பயிற்றுவிப்பாளரைத் தேடும் படலத்தை இப்போது ஆரம்பித்திருக்கின்றன.

இதன் காரணமாக கிரிக்கெட் அணிகளின் முன்னாள் அணித் தலைவர்கள், முன்னாள் அதிரடி வீரர்கள் ஆகியோருக்குக் 'கிராக்கி' ஏற்பட்டுள்ளது. காரணம் பெரும்பாலான அணிகள் கிரிக்கெட் உலகில் சோபித்த முன்னாள் வீரர்களையே தமது பயிற்றுவிப்பாளர்களாக நியமித்து வருகின்றன.

கிரிக்கெட்டைப் பொறுத்தமட்டில் பயிற்றுவிப்பாளர் பதவி என்பது மிகவும் வருமானம் மிக்கதொன்றானதாகவும், கௌரவம் உள்ளதாகவும் கருதப்படுகின்றது.

இதன் காரணமாக முன்னாள் வீரர்கள் பலர் இந்தப் பதவியைக் கைப்பற்றுவதற்கு விழுந்தடித்துக் கொண்டு - அவசரப்பட்டு விருப்பம் தெரிவிப்பது கிரிக்கெட் ரசிகர்கள் அறிந்ததே.

சில நாடுகளில் இந்தப் பயிற்றுவிப்பாளர் நியமனம் அரசியல் தலையீடுகளால் மேற்கொள்ளப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் கிரிக்கெட் அணிகளின் பயிற்றுவிப்பாளர் நியமனங்களே தற்போது சூடு பிடித்துள்ளன.

### இலங்கை அணிக்கு பயிற்றுவிப்பாளர்

இலங்கை அணியைப் பொறுத்தமட்டில் இதுவரை பயிற்றுவிப்பாளராக இருந்தவர் ரொம் மூடி. கிரிக்கெட் உலகில் -பயிற்றுவிப்பாளர் வரிசையில் மிகவும் திறமையானவராகவும், மரியாதை மிகுந்தவராகவும் விளங்கியவர் அவர்.

இம்முறை இலங்கை அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச்சென்ற பெருமை அவருக்கு உண்டு. இலங்கை அணி வீரர்கள் எல்லோரும் அவரிடத்தில் கொண்டிருந்த மிகுந்த மரியாதை, அவரின் சிறந்த வழி நடத்தும் திறன் காரணமாகக் கடந்த இரண்டு வருடங்களாக பிரச்சினைகள் ஏதும் இல்லாத அணியாக இலங்கை அணி திகழ்கிறது. ரொம் மூடி பதவி வகித்த காலப்பகுதியில் வீரர்களுடன் தகராறில் அல்லது வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டது கிடையாது. அவ்வாறானதொரு பயிற்றுவிப்பாளரை இலங்கை அணி அபுதாபித் தொடருடன் இழந்திருப்பது ஒரு பேரிழப்பாகக் கருதப்படக்கூடியது. அபுதாபித் தொடருடன் ரொம்மூடி ஓய்வுபெற்றுவிட்டார்.

இதனால் இலங்கை அணிக்குப் புதிய பயிற்சியாளர் ஒருவரை நியமிப்பதற்குத் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆஸ்திரேலிய பிராந்திய அணியான 'நியூ சௌத் வேல்ஸ்' அணியின் பயிற்சியாளரான டிரவொர் பெய்லிஸ், ஆஸ்திரேலியாவின் குவின்ஸ்லாந்தும் பிராந்திய அணியின் பயிற்சியாளராக உள்ள டெர்ரி ஒலிவர் ஆகியோருக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

டிரவொர் பெய்லிஸுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. டிரவொர் பெய்லிஸ் 1980 மற்றும் 90களில் ஆஸ்திரேலியாவின் 'நியூ சௌத்வேல்ஸ்' அணிக்காக 58 போட்டிகளில் விளையாடியுள்ளார். எனினும் சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய அனுபவம் இவருக்கு இல்லை. ஆயினும், இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக வருவதற்கு இவருக்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

### இந்திய அணியில் அரசியல் தலையீடு

அடுத்தது இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் விடயம். மிகவும் சர்ச்சைக்குள்ளாகியுள்ள நிலையில் இந்த விடயம் தற்போது உள்ளது. காரணம் பயிற்றுவிப்பாளர் விடயத்தில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளமை தான்.

இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்த டேவ் வட்மோர், தென்னாபிரிக்காவின் கிரஹம்போர்ட் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இதில் தென்னாபிரிக்காவின் கிரஹம் போர்ட்டுக்கு வாய்ப்புக்கள் அதிகம் என்று சொல்லப்படுகின்றது. அதற்குக் காரணங்கள் உள்ளன.

இந்திய அணியின் பயிற்றுவிப்பாளரை நியமிப்பதற்கான 7 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் இந்திய அணியின் முன்னாள் தலைவர்களான சுனில் கவாஸ்கர், ரவி சாஸ்திரி, வெங்கட் ராகவன் ஆகியோரும் கிரிக்கெட்சபைத் தலைவரும் அரசியல்வாதியுமான சரத் பவார், செயலாளர் நிரஞ்சன் ஷா, பொருளாளர் சீனிவாசன், இணைச் செயலாளர் பாண் டேவ் ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவில் உள்ள முன்னாள் இந்திய வீரர்களுக்கு வட்மோர் பயிற்சியாளராக நியமிக்கப்படுவதில் உடன்பாடு இல்லை. அணித்தலைவர் ராகுல் ட்ராவிட்டும் வட்மோர் பயிற்சியாளர் ஆவதை நிராகரித்துள்ளார். இவையெல்லாம் கிரஹம் போர்ட்டுக்கான ஆதரவை அதிகரிக்கச் செய்துள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக கிரிக்கெட் சபைத் தலைவர் சரத் பவாரும் கிரஹம் போர்ட்டுக்கு ஆதரவாகவுள்ளார். காரணம் சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் பேர்சிசோன் மறைவிற்குப் பின்னர், அப்பதவிக்கு இந்தியா தரப்பில் சரத் பவார் முயன்று வருகிறார். கிரஹம் போர்ட்டை இந்திய அணிக்குப் பயிற்சியாளராக நியமித்தால் தென்னாபிரிக்காவின் வாக்கு தனக்குக் கிடைக்கும் என அவர் நம்புகிறார். இவை அனைத்தும் வட்மோர் பயிற்சியாளர் ஆவதற்கான வாய்ப்பைப் பின் தள்ளியுள்ளன.

### மீண்டும் வட்மோர்

பங்களாதேஷ் அணிக்கும் புதிய பயிற்றுவிப்பாளர் ஒருவரை நியமிக்கவேண்டிய நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. பங்களாதேஷ் அணியை ஓர் உறுதியான நிலைக்கு இட்டுச் சென்ற பயிற்சியாளரான டேவ்ட் வட்மோர் அந்தப் பதவியில் இருந்து விலகியமை தான் அதற்குக் காரணம்.

டிலான்

வட்மோரைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு சிறந்த பயிற்றுவிப்பாளர். இலங்கை அணிக்கும் அவர் பயிற்றுவிப்பாளராக விளங்கியவர்.

இந்திய அணியின் பயிற்றுவிப்பாளராக வருவதற்கு அவர் பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து விலகியிருந்தார். ஆயினும் இந்திய அணி பயிற்றுவிப்பாளர் பதவி அவருக்குக் கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இதனால் பங்களாதேஷ் அணி அவரைத் தொடர்ந்தும் தனது பயிற்றுவிப்பாளராக வைத்திருக்க விருப்பம் தெரிவித்துள்ளது. பயிற்சியாளர் பதவிக்கான கதவு வட்மோருக்குத் திறந்தே உள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபைச் செயலாளர் மஹ்பூப் அனாப் அறிவித்துள்ளார்.

இதனால் வட்மோர் மீண்டும் பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளர் ஆகக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

எனவே அடுத்துவரும் முக்கிய போட்டிகளில் சில அணிகள் புதிய பயிற்றுவிப்பாளருடன் களமிறங்கவுள்ளன. அதனைக் காண்பதற்குக் கிரிக்கெட் ரசிகர்களும் ஆவலாகவுள்ளனர். அதுவரை பொறுத்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




சங்கரப்பிள்ளை றோட்,
ஆனைக்கோட்டையைச் சேர்ந்த
**சம்சுஜின் - சுசிலா** தம்பதியரின்
செல்வப்புதல்வன் **அபினேஷ்**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (09.06.2007) சனிக்கிழமை ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார். இவரை ஜேர்மனியில் உள்ள அப்பா, அம்மா, அப்பம்மா (மகேஸ்), தனுச்சித்தப்பா, சீலன் மாமா, சுசி மாமி, அபிஷேக் அண்ணா, ஆகாஷ் அண்ணா, யோகன் அப்பப்பா, யோகா அப்பம்மா, சித்தப்பாமார்களான லிபேஷ், விதுஷ், நரேஷ், லண்டனில் இருக்கும் குமார் அப்பப்பா குடும்பம், பாறேனில் இருக்கும் உதயன் அப்பப்பா குடும்பம், ரவி அப்பப்பா குடும்பம், லெபனானில் இருக்கும் கண்ணன் அப்பப்பா குடும்பம், மயூரா அப்பம்மா மற்றும் யாழ்ப்பாணத்தில் இருக்கும் பாட்டிமார், தாத்தாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், சித்தப்பாமார், அத்தைமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் துணையுடன் பல்கலைகளும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சங்கரப்பிள்ளை றோட்,
ஆனைக்கோட்டை. (61875)

தகவல்:
**சி.லிங்கேஸ்வரி** (அப்பம்மா).

## இறைச்சிக்கோழி

ஐஸ் புறொயிலர் இறைச்சி மற்றும் கல்பேட் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
**NEW R.S.K. FARM**
மான்ஸ் பாடசாலை வீதி,
உடுவில். (#58588)

## Organ/ Violin Notes

Organ, வயலின், Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான 250 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகளும் Organ, வயலின், Guitar, மிருதங்கம் ஆகியனவும் விற்பனைக்குண்டு. புதிய வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஆரம்பமாகும்.
**கரவீணா இசைமன்றம்,**
75, கோவில் வீதி, நல்லூர்.
T.P.: 0713055991, 0777031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே). (61421)

## Certified Computer Accountant

கணக்கியலில் ஆர்வமுடைய அனைவருக்குமான கணக்கீட்டு மென்பொருள் கற்கைநெறி.

Tally ies 7.2

**AIT 2007**
Free Accountancy Intelligence Test

30 நிமிடங்களில் 30 வணிகம் மற்றும் கணக்கியல் கேள்விகளுக்கு விடையளித்து 60% வரையிலான கட்டணக் கழிவைப் பெறுங்கள்.
பரீட்சை பற்றிய மேலதிக விபரங்களுக்கு...

**CSC-ASIAN**
COMPUTER EDUCATION
101,2[nd] மாடி ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு மேலாக)
Tel :021-222-8196




**நாளை**
யாழ் நகரில் ...

## I.Q. COMPETITION - 2007

(English Medium)
Golden Opprtunity for Grade 6, 7, 8, 9, & 10
English Medium Students
Examination will be
Held on 15[th] of July 2007 (15.07.2007) at 10.00 a.m.
Prizes will be given to the 1st Ten Students in each grade Register at
**Ever Shine Education Centre**
**# 123, Brown Road, Jaffna.**
(61337)
on or before 1[st] of July 2007

## மணமகள் தேவை

உயர் கௌரவ மிகச்சிறந்த நற்பண்புள்ள அழகிய சிவந்த கிறிஸ்தவ 31 வயது அரச உத்தியோகத்தருக்கு தகைமையுள்ள கிறிஸ்தவ/RC மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள்.
தொடர்பு: 077 6426893
விளம்ப. இல. 2976
C/O உதயன்.

## ஒப்பந்தகாரர்களைப் பதிவுசெய்தல் - 2007

இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகத்தின் கீழ் உள்ள சுன்னாகம், யாழ்.நகரப்பகுதி, யாழ்.புறநகர்பகுதி, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, வேலணை ஆகிய மின் அத்தியட்சகர் பணிமனை பிரிவுகளிற்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளைச் செய்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வேலை விவரம்:**
1. புதிய மின்னிணைப்பு வேலைகள்
2. உயர், தாழ் அழுத்த புதிய கட்டமைப்பு, பரம்பல் மற்றும் உப மின் நிலைய வேலைகள்
3. புனரமைப்புத் திட்டத்தின் கீழ் உயர், தாழ் அழுத்த கட்டமைப்பு, பரம்பல் மற்றும் உப - மின்நிலையங்களின் முறைமைகளினை விரிவாக்கல் (System Augmentation) வேலைகளினை மேற்கொள்ளல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளிற்கு ஒப்பந்தகாரர்கள் தனித்தனி விண்ணப்பங்களினைச் சமர்ப்பித்தல் வேண்டும். வேலை சம்பந்தமான விவரங்களையும் விண்ணப்பங்களையும் பெற்றுக் கொள்வதற்கு மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500.00இற்கான கொடுத்தல் பத்திரத்தினை எமது அலுவலகத்தில் பெற்று வங்கியில் செலுத்தலாம். விண்ணப்பப் படிவங்கள் 24.06.2007 வரை மின் பொறியியலாளர், யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 25.06.2007ஆம் திகதி மு.ப.10 மணிக்கு முன்பதாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அன்றைய தினம் மு.ப.10 மணிக்கு எமது அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
2007.06.07 (000)

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை

## 31ஆம் நாள் நன்றி செலுத்தும் ஆராதனையும் நன்றி நவிலலும்

நல்ல போராட்டத்தை போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தை
காத்துக்கொண்டேன்
தீமத்தேயு 4:7



அமரர் **அரியமணி நவரத்தினம்**

மண்ணுலகில் 03.07.1939 | விண்ணுலகில் 08.05.2007

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்துநேரில் வந்தும் கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் மற்றும் பலவழிகளிலும் உதவி செய்து இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (09.06.2007) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும் அன்னாரின் வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி செலுத்தும் வழிபாட்டிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

'அரியவாசா',
துணாவில் மேற்கு, சாவகச்சேரி. (சி/52586)

தகவல்:
குடும்பத்தினர்.

## STUDY IN LONDON
**Spot Admission**
Hurry for the June - July Batch

WITHOUT IELTS

**IELTS** இல்லாமல் எனக்கு **College admission** கிடைத்ததையிட்டு பெரும் வாய்ப்பாகக் கருதுகின்றேன். பகுதிநேர வேலையினையும் என்னால் பெறமுடிந்தது. அனுமதி பெற்ற மாணவன்

Dip. In Export & Import Mgt. Dep in Shopping & Logistic Mgt. Adv Dip In Tourism Mgt. Bachelor of Bus Administration (BBA), Master of Bus Administration (MSc), Information Technology, Master of Information Tech, Bachelor in Law (LLB), Master in Law (LLM), M.A. in Education, Hotel Mgt, Msc in Health Mgt, Msc International Banking & Finance, BSc Accounting Finance, International Marketing, Adv Dip in Travel & Tourism Mgt, Cabin Crew & Many More Courses....

**Admission Letter within 5 days**

- பல்துறை சார்ந்த **Diploma Degree, Master Degree** கற்கைநெறிகள்.
- 60 இற்கு மேற்பட்ட **University / College** இனை தெரிவுசெய்யும் வாய்ப்பு
- **Part time** வேலை **Airport** ஒழுங்கு குறைந்த கட்டணத்தில் வதிவிட வசதிகள் செய்து தரப்படும்.
- அனுபவமும் தனித்துவமுள்ள சட்டத்தரணிகளால் விசா **100%** பெற்றுகொள்ள உதவி செய்து தரப்படும்

EISC **EXPRESS**
**INTERNATIONAL STUDIES & CONSULTANTS**
#15, Sirambiyadi Lane, (Off Stanly Rd.) Jaffna
Phone : 021-222 8250, 0777 222422

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna

**Diploma in Hardware Engineering**
Assembling, Upgrading, Troubleshooting, Fault Finding, Repairing, Servicing, Software Installation, Configuring, Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
Introduction to Computer, Operating System(Win XP), Internet & email, Adobe Photoshop, Adobe Premier, Cool3D Studio, Pinnacle Studio, VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
Introduction to Computer, Operating System(Win XP), Internet & email, Adobe Photoshop, Corel Draw, Cool3D Studio, Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 11/06/2007 - 09.00AM

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 08/06/2007 , 09/06/2007 10/06/2007 , 13/06/2007 ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

சர்வதேசரீதியில் (இலங்கையிலும்) முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Company Accounts இனையும் உள்ளடக்கி

3Months **Diploma in Computerized Accounting**
**ACCPAC + Quick Books Premier + MYOB**

Course Contents
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting

வகுப்புக்கள் ஆரம்பம்:
Batch I : 07/06/2007
Batch II :09/06/2007
BatchIII : 10/06/2007
Batch IV: 11/06/2007

## பத்தாவது ஆண்டு நிறைவின் நினைவுகள்

அன்னை மடியில் 27 - 05 - 1930



ஆண்டவன் அடியில் 30 - 05 - 1997

### அமரர் ஆழ்வாப்பிள்ளை சிவபாதம்

திதி: 09-06-2007

அன்புள்ள கணவராக, ஆசையுள்ள அப்பாவாக
அருமையான மாமாவாக பேரன்புள்ள பேரனாக
எம்முடன் வாழ்ந்த எம் ஆருயுரே அப்பா!
நீங்கள் அமரத்துவம் அடைந்து
ஆண்டுகள் பத்து ஓடினாலும்
ஆசை முகம் மறக்குமோ அப்பா!
அடிவேராய் எங்கள் மூச்சில்
அழியாமல் இருக்கிறீர்கள் அப்பா.

தகவல்:
**சி.மோகனராஜா**
(மகன் - C.T.B., பருத்தித்துறை).
**சி.மதன்மோகன்**
(மருமகன்- மதுவரித்திணைக்கள அத்தியட்சகர், திருகோணமலை).

நீங்காத நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(61416)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 20 - 05 - 1933



மறைவு 11 - 05 - 2007

### அமரர் தங்கராசா மனோறஞ்சிதம்

(காலஞ்சென்ற இரும்புக் கடை தங்கராசாவின் மனைவி)

அன்பின் அம்மா!
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும் உங்கள் உருவமும்
நீங்கள் பேசும் வார்த்தைகளும் எங்கள் நெஞ்சைவிட்டகலாது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

நாளை (10-06-2007) ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி, பொக்கணைச் சந்தியில் உள்ள மகளின் இல்லத்தில் காலை நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதியம் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்ட 'லிவ்கோ அக்கடமி' ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (61187)

நிரந்தர முகவரி:
காளிகோயில் ஒழுங்கை,
மதவடி, வல்வெட்டித்துறை.

தற்போதைய முகவரி:
பொக்கணைச் சந்தி,
சந்நிதி றோட், உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல்; அச்சிடப்பட்ட சிட்டைகளில் விவரங்கள்

## — வர்த்தகர்களுக்கு வணிகர் கழகம் அறிவுறுத்து —

யாழ்ப்பாணம், ஜூன் 8

வர்த்தகர் நிலையங்களில், நுகர்வோரின் பார்வைக்கு ஏற்றவகையில் பொருள்களின் விலைப் பட்டியல்கள் வைக்கப்படவேண்டும் என்று யாழ்.வணிகர் கழகம் அறிவுறுத்தி உள்ளது.

கப்பல்களில் எடுத்துவரப்படும் பொருள்களின் விற்பனை குறித்து கடந்த 4ஆம் திகதி அரச அதிபர் மற்றும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

அப்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வணிகர் கழகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

* விற்பனை செய்யப்படும் சகல பொருள்களுக்கும் உரிய வர்த்தக நிலையத்தின் பெயர் அச்சிடப்பட்ட சிட்டைகள் தெளிவாக எழுதப்பட்டு வழங்க வேண்டும்.
* விற்பனை நிலையத்தின் பெயர் பொறிக்கப்படாத சிட்டைகளை வழங்கப்பக் கூடாது.
* நுகர்வோருக்கு பொருள்களை விற்பனை செய்யாது அவற்றைப் பதுக்கி வைக்கக் கூடாது.

போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டதாகச் செய்திக் குறிப்பில் மேலும் தகவல் வெளி யிடப்பட்டுள்ளது.

இத் தீர்மானங்களை எதிர்வரும் காலங்களில் பின்பற்றி தங்கள் மீது எடுக்கப்படும் சட்டநடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (அ-203)

## குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு கடந்த ஆண்டில் யு.என்.எச்.சி.ஆர். ரூ. 84 மில்லியன் செலவிட்டுள்ளது

குடாநாட்டில் இடம்பெயர்ந்து நலன் புரி நிலையங்களிலும் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் வாழும் மக்களுக்காகக் கடந்த ஆண்டு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவ னத்தால் 84 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இவ்விவரம் யாழ். செயலகத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிதியின் மூலம் இடம்பெயர்ந்து வாழ்பவர்களுக்கென அரை நிரந்தர வீடுகள் - 159, மீள அமைக்கக்கூடிய வீடுகள்- 286, மலசலகூடங்கள் -126 என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

குழாய்கிணறுகள், பொதுமண்டபங்கள் என்பவை புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் பல கிணறுகளின் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் சாவகச்சேரி, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தற்காலிகக் குடிசைகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (அ-202-95)

## விசேட தேவையுடைய குழந்தைகளுக்கு வசதியான இருக்கைகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூன்9

சுகாதார சேவை மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை ஊடாக சமூக தொழில் வழிச் சிகிக்சைப் பிரிவும் கரித்தாஸ்- கியூடெக் நிறுவனமும் இணைந்து வலுவற்ற விசேட தேவையுடைய 7 பிள்ளைகளுக்கு விசேட கதிரைகளை வழங்கியுள்ளன.

கதிரைகள் வழங்கும் நிகழ்வு கடந்த 4ஆம் திகதி கியூடெக் நிறுவன ஜெபா மண்டபத்தில் நிறுவன இயக்குநர் வணபிதா கி.யோ. ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை இயக்குநர் டாக்டர் ஞானஜோதி, டாக்டர் மருதனார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தலா 12 ஆயிரம் ரூபா பெறுமதியான 6 விசேட இருக்கைகளும் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு முக்கோண வடிவ விசேட இருக்கையும் விசேட தேவையுடைய குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன.



இவ்வாறான விசேட இருக்கைகள் தேவையான 45 சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் முன்னுரிமை அடிப்படையில் 25 குழந்தைகளுக்கு இந்த ஆண்டுக்குள் விசேட இருக்கைகள் வழங்குவதற்கு மேற்படி அமைப்புகள் திட்டமிட்டுள்ளன.

இந்நிகழ்வில் வைத்து பாடசாலையை விட்டு இடைவிலகிய 17 வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. (202)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜூன் 9

தென்மராட்சி, கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வலய மட்ட திருக்குறள் மனனப் போட்டிகள் இன்று சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

போட்டிகளில் தெரிவு செய்யப்படும் 100 மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.(203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்9

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் பேராசிரியர் அ.துரைராஜாவின் 13ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

டாக்டர் மு.தங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் பீட பேராசிரியர் எம்.நடராஜாசுந்தரம் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து நினைவுப் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். (203)

* * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

உதவிப் பணிப்பாளர் ஜே.அநிருத்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன், பேராசிரியர் கோபாலகிருஷ்ணஐயர், சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், பேராசிரியர் ப.கணேசலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகளும் வழங்கப்படவுள்ளன. (203-79)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்9

நெயோ கல்சரல் கவுன்சிலின் ஏற்பாட்டில் புலவர் வேல்மாறனின் 'காதல் நெஞ்சம்' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு குருநகர், 'பாங்ஷால் வீதியில் உள்ள கார்மேல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்கலாநிதி ச.வி.ப. மங்களராஜா அடிகள் ஆசியுரை நிகழ்த்த கலைஞானகேசரி வி.ஜே. கொன்ஸ்ன்ரைன் நூல்வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

நூலின் முதற்பிரதியை யாழ்.செலிங்கோ வீடமைப்பு முகாமையாளர் முருகதாசன் ஆரூரன் பெற்றுக் கொள்ள மதிப்புரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார். (202)

* * *

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் நாளை காலை 6.30 மணிக்கு இலவச யோகாசனப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணி முதல் 8 மணி வரை இந்த வகுப்புகள் நடைபெறும் என்று சமிதியினர் தெரிவித்துள்ளனர். (202)

## மருந்துக் கலவையாளர் எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்9

மருந்துக்கலவையாளர்களுக்கான ஆள் சேர்ப்பு எழுத்துப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் தாதிகள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளின் பெயர்விவரங்களை போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தரிடம் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (202)

## டிப்ளோமா தாரிகளுக்கு 11, 12இல் பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற உள்ளது.

இதில் பங்குபற்றவுள்ள, 2002- 2004 ஆம், 2003 - 2005ஆம் கல்வியாண்டில் சித்தி பெற்ற யாழ். மாவட்ட மாணவர்களை, பட்டமளிப்பு விழாவுக்கான அழைப்புக் கடிதங்களை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் பெற்றுக்கொள்ளுமாறு பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (அ-203)

## தேங்கிய தபால்களை அனுப்ப நடவடிக்கை

நல்லூர்,ஜூன்9

திருகோணமலை தபாலகத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கென சேகரிக்கப் பட்ட தபால்களில் இதுவரை அனுப்பப்படாது தேங்கியிருந்த சுமார் 144 தபால் பொதிகளை இங்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசிய பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும் 'இந்துருவலி' கப்பலில் குறிப்பிட்ட 144 தபால் பொதிகளும் ஏற்றப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவைவந்துசேருமென எதிர்பார்க்கப்படுவதாகவும் யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபர் கே.துரைசிங்கம் தெரிவித்தார். (அ-111)

## பதவி வெற்றிடங்கள்- விண்ணப்பியுங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்9

வடக்கு- கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், திணைக்களத்தில் நிலவும் கால்நடை அபிவிருத்தி போதானாசிரியர் பதவிக்கு நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியான இருபாலரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜி.சி.ஈ. உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் பழைய பாடத்திட்டமாயின் மூன்று பாடங்களிலும் புதியபாடத் திட்டமாயின் இரண்டு பாடங்களிலும் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

தகுதியானவர்களை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் 'உதவிப்பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வடபிராந்தியம், இல.280, பலாலிவீதி கந்தர் மடம்' என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு உதவிப் பணிப்பாளர் (வடக்கு) டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (203)

* * *

மாணவத் தாதியரை ஆள்சேர்ப்பதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் மற்றும் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று சுகாதார சேவைகள் பிரதி மாகாண பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். தாதிகள் பயிற்சி நெறிக்கு ஆள்சேர்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை உதயன் பணிமனையில் பார்வையிட முடியும்.(203)

## பயணிகள் கப்பலில் குழந்தை பிரசவித்தார் இளம் தாய்!

யாழ்ப்பாணம், ஜூன் 9

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைத் துறைமுகத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்த கப்பலில் இளம் தாய் ஒருவர் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ்.யசோதா (வயது - 27) என்ற இளம் தாயே குழந்தையைப் பிரசவித்தவராவார்.

தனது கணவரை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு கப்பலில் யாழ். திரும்பியபோதே இந்தப் பிரசவம் இடம்பெற்றுள்ளது.

கப்பலில் பிரசவ வலியால் துடித்த அந்த இளந்தாயின் பிரவசத்தைக் கவனிப்பதற்குக் கப்பலில் இருந்த பெண்கள் எவரும் முன்வரவில்லை. கப்பலில் வந்த யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மூன்றாம்வருட மாணவனே தம்மால் இயன்றளவு உதவியதாக அறியப்படுகிறது. எனினும் பிரசவத்தாய் உரிய முறையில் கவனிக்கப்பட்டு சுகப்பிரவசம் நிகழ்ந்ததாக கப்பலில் வந்தோர் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து இராணுவ அம்புலன்ஸ் மூலம் தாயும் சேயும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (50)

## வாசகர் திருமுகம்

### வீடுகளில் பெற்றோர்களே மேற்கொள்ளும் சித்திரவதை

03.06.2007 உதயன் பத்திரிகையில் பக்கம் 05இல் இடம்பெற்ற சித்திரவதை பற்றிய கட்டுரை தொடர்பாக இதை எழுதுகின்றேன்.

கட்டுரை முக்கியமாக தற்போதைய போர்ச் சூழ்நிலையில் நடைபெறும் சித்திரவதை பற்றியே குறிப்பிடுகின்றது. இதைவிட மோசமான சித்திரவதை இல்லங்கள் தோறும் தினம் தினம் நடைபெறுகின்றன.

பெற்றார் கல்விக்காகவோ வேறு தேவைக்காகவோ பிள்ளைகளை வருத்துவதை குறிப்பிடுகின்றேன். தங்கள்பிள்ளை வகுப்பிலே முதலாம் பிள்ளையாக வரவேண்டும் ஒவ்வொரு பாடத்திலும் 100 புள்ளிகளுக்கு குறையாமல் எடுக்க வேண்டும்; பேச்சுப்போட்டி, நடனப்போட்டி முதலிய குழுக்களில் இடம்பெறவேண்டும். இப்படித் தினமும் பிள்ளைகளை நச்சரிக்கிறார்கள் பெற்றோர்கள். பாடசாலையிலிருந்து வந்தவுடன் வீட்டுப் பாடங்களைப் படி, ரியூசனுக்குப் போ, ஏன் எழுத்துப் பிழை விட்டாய், ஏன் கணக்குக் பிழை விட்டாய் என்று கலக்குகிறார்கள். பிள்ளைக்கு ஆறுதல் வேண்டும், நிம்மதிவேண்டும் பசியா தூக்கமா, அலுப்பா என்ற உள உடல் தாக்கங்களைப் பற்றிய கவலை அவர்களுக்கு இல்லை. 50 வயதிலுள்ள பெற்றார், 5 வயதுப் பிள்ளையை தம்மோடு ஒத்த தரத்திலே வைத்து நடத்துகிறார்கள். எனக்குவிளங்குவது ஏன் உனக்கு விளங்கவில்லை என வெருட்டுகிறார்கள்.

இன்னோரன்ன நெருக்குதல்களால் பிள்ளைகளுக்கு உண்டாகும் தாக்கங்கள் பின்னடைவுகள் பல. பாவம் படித்த பெற்றாரே அதை உணர்வதில்லை என்பது தான் பெரிய கவலை!

க.மகேசன், ஓய்வுபெற்ற கல்வியாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

**கரித்தாஸ் கியூடெக் இளவாலை பிராந்தியம்**

*இளவாலைப் பிராந்திய இளையோர் கலைக்குழுவால் நடாத்தப்பட்ட வறுமையைப் போக்கும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் அதிர்ஷ்டசாலிகளின் விபரம் வருமாறு:-*

முதலாம் இடம்:- 8597 ஞா.விதுரன் - மாரீசன்கூடல் - இளவாலை.
இரண்டாம் இடம்:- 3707 பா.சிவானுஜன் - இளவாலை வடக்கு.
மூன்றாம் இடம்:- 8027 செ.பாலகருணா - அராலி வீதி, சங்கானை.

ஆறுதல் பரிசில்கள்:

3348, 4088, 9842, 9888, 3302, 9030
3205, 2531, 9033, 476, 2091, 6124
6244, 2530, 9913

*மேற்படி அதிர்ஷ்டசாலிகள் 25.06.2007 இற்கு முன்னர் உங்களுடைய பரிசில்களை இளவாலை மாரீசன் கூடல் பங்குமனையில் பெற்றுக்கொள்ளவும்.*

தகவல்:
இளவாலைப் பிராந்திய
இளையோர் குழு

(சி-52583)

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி சுகந்தினி சிறீமுரளிதரன்**
பதில் தலைவர் (நடனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
அவர்களின் பாசமிகு மாமனார்

**அமரர் வேலுப்பிள்ளை தம்பிராஜா**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர்கள் - நடனம், சித்திரமும் வடிவமைப்பும்,
இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம்.

(61440)

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 30 07 1955



மறைவு 10 05 2007

**அமரர்**
**திருமதி. பன்னீர்செல்வம் புஸ்பராணி**

கண்ணின் மணியெனக் காத்தவர்கள்
ஆவி கரைந்துவிட தினமும்
எண்ணங்கள் வந்து எமை
ஆட்டி அலைத்து வருத்திடினும்
திண்ணமிது மண்மீது பிறந்தவர்கள்
தீக்கிரையாவ தென்னும்
உண்மையை உணர்ந்து
உள்ளத்தில் ஆறுதல் எய்துகின்றோம்.

பொக்கணைச்சந்தி
உடுப்பிட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்

## கோழி இறைச்சி விற்பனை

*புறொயிலர் (ஐஸ்) ஊர்சேவல் வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.*

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

(61447)

## மணமகன் தேவை

*யாழ்.இந்து கௌரவ குடும்பம் உதயத்தில் செவ்வாய், கிரகபாவம் 61, நட்சத்திரம் பூரம் முதலாம் பாதம், 1975இல் பிறந்த பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு மணமகன் தேவை. தொடர்பு: செல்வன் 0773126456*

(61443)

## யாழ்.பொதிகள் சேவை

- விமானம் மூலமாக உடனுக்குடன் உங்கள் பொதிகள் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்படும்.
- கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D எடுத்து அனுப்பப்படும்.
- 100 கிலோவிற்கு மேல் அதி விசேட விலை
- பூதவுடல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
- தேவை ஏற்படின் விமானம் 'சாட்டட்' (Charted) செய்து கொடுக்கப்படும்.

EURO GROUP 011 - 4542190
077 - 3846998

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### மொழிபெயர்ப்பாளர் சேவை

பல்கலைக்கழகத்தின் உத்தியோக பூர்வ ஆவணங்களை சிங்களமொழியிலிருந்து தமிழ்/ஆங்கில மொழிக்கும் மறுதலையாகவும் மொழி பெயர்ப்பு செய்யக்கூடியவர்களின் சேவை கோரப்படுகின்றது.

சத்தியப் பிரமாணம்செய்த மொழி பெயர்ப்பாளர்களாக இருத்தல் அவசியம். 11.12.2003 திகதியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 12/2003 இன் பிரகாரம் கொடுப்பனவு வழங்கப்படும். தகுதியுடையவர்கள் பொருத்தமான விவரங்களுடன் 22.06.2007ஆம் திகதிக்கு முன்பதாக உதவிப் பதிவாளர்/ நிர்வாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

09.06.2007 பதிவாளர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் மணற்காடு J/418 கிராம உத்தியோகத்தராக கடமையாற்றும்
**செ.தோமஸ் யூட்**
*அவர்களின் பாசமிகு தந்தையார்*
**தோமஸ் செபமாலை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

07.06.2007 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபரும்
பணிமனை உத்தியோகத்தர்களும்.

வடமராட்சி கிழக்கு,
மருதங்கேணி.

(சி-52592)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

North Lanka IIT நிறுவனத்தில்
Trinity University USA - Spain இனது
B.Sc. in Computer Science
கற்கைநெறியில் எம்முடன் பயின்ற எமது நண்பன்



**பாலசுப்பிமணியம் கோபாலகிஷ்ணன்**

B.SC.(Hons) பட்டம் பெற்றதையிட்டு மகிழ்வுடன் பாராட்டுகின்றோம்!

வாழ்த்துபவர்கள்:- 1st & 2nd Batch Students (B.Sc.Comp.Sc.)

North Lanka IIT,
Chankanai & Jaffna.

(61437)

## நாடக விழா

எமது பாடசாலை இல்லங்களிற்கு இடையிலான நாடகவிழா **இன்று (09.06.2007)** சனிக்கிழமை காலை 9 மணிக்கு **மானிப்பாய் பிரதேசசபை** மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் - 10/-
வளர்ந்தோர் - 50/-

(ரிக்கற்றுகளை நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.)

அதிபர்
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை.

(6144)

## மரண அறிவித்தல்கள்

### தோமஸ் செபமாலை

(துரைமாஸ்ரர்-தும்பளை, பருத்தித்துறை)

தும்பளை, வோல்டன் வீதியைச் சேர்ந்த தோமஸ் செபமாலை (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் 07.06.2007 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தோமஸ்- முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் மேரி கிறேஸ் (கனடா) அவர்களின் அன்புக் கணவரும் மேரி லுமினா (ஐடா- ஜேர்மனி), மேரிவதனா (பிரான்ஸ்), மேரி மடோனா (டோனி- கனடா), தோமஸ் யூட் (கிராம அலுவலர்), மேரி ரேதிகா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரனிஸ் ஜீவநேசன், லயனல் ஜெயக்குமார், பேணாட் சுரேந்திரன், சுனித்த, நாரியே ஆபிரகாம் (லக்கி) ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்ரபானி, மெலானி கொட்விறி, மரீன், லொறீன், யோசவா, ஆஸ்லி, சுவாங்கி, சோபியா, லத்திகா, சுவர்ணகா ஆகியோரின் அன்புப் பேரனும் தவமலரின் (பிரான்ஸ்) அன்புச் சகோதரரும் இராஜகுலம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மரியநாயகம், எட்வேட (கனடா), அன்ரன்றிச் (கொழும்பு), அல்பேட் (கனடா), வயலற் (லண்டன்), டெய்சி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் **Ogden Funeral Home (Sheppard/ Midland)** இல் 08.06.2007 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிமுதல்இரவு 9 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நல்லடக்க ஆராதனை **St. Thomas the Apostle 14 Highgate Dr. Steeles & Birchmount** தேவாலயத்தில் இன்று (09.06.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பின்னர் **Christ the hing cemetery** இற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செ.தோமஸ் யூட்** *(மகன்)*
**021 226 4466**
**905 303 3567** *(கனடா)*

(சி-52589)

### V.K. பத்மநாதன்

*(பழைய மாணவன் - யாழ்.மத்திய கல்லூரி, உரிமையாளர்- சுகலட்சுமி ஸ்ரோர்ஸ், மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.)*

இல.09, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட V.கந்தையா பத்மநாதன் 06.06.2007 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர்களான கந்தையா - பொன்னு தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் அமரர்களான மருதடியான் - அன்னம்மா (நயினாதீவு - 7) தம்பதியரின் அன்பு மருமகனும் யோகலட்சுமியின்அன்புக் கணவரும் சுகந்தினி (ஆசிரியை, வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), சிவயோகநாதன் (பட்டு), தர்மினி (**Drama and Theatre 1999/2000 Batch,** யாழ்.பல்கலைக்கழகம்), சாந்தினி (இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), ரங்கநாதன் (ரங்கனாஸ்), அமரரான கஜேந்தினி, சிவநந்தினி (பழைய மாணவி, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), சிவமைந்தன் (பழைய மாணவன், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி, புகுமுக மாணவன் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு அப்பாவும் ஜெயக்குமார், சத்தியவாணி, திருவருட்செல்வன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனும் சிவபாக்கியம், பரமேஸ்வரி, இராசலட்சுமி, அமரரான செல்வலிங்கம், வர்ணகுலசிங்கம், ராஜேஸ்வரி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பெருமான் நாகராசா, அமரரான கனகரட்ணம், தனபாக்கியலட்சுமி, நீலாம்பிகை, யோகரட்ணம், ஸ்ரீஸ்கந்தராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் முற்பகல் 10 மணியளவில் வவுனியா தோணிக்கல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"பத்மாசனம்",
132, 5ஆம் ஒழுங்கை [தேக்காவத்தை],
கண்டி வீதி, வவுனியா.

தகவல்:
**ரங்கன்** *(ரங்கனாஸ்).*

## ஆறாத்துயரில் ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வி கந்தசாமி பரமேஸ்வரி (தேவி)**

இன்பத்தின் நிறைவாய்
24 11 1975

துயரத்தின் இமயமாய்
21 05 2006

*அம்மா என்றும் ... ஐயா என்றும்...*
*அண்ணன் என்றும் ... அக்கா என்றும்...*
*தம்பி என்றும் ... பாசமுடன்*
*அழைப்பாய் என்றும்...*
*இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர் என்றிருந்தோம்*
*இடைநடுவே தவிக்கவிட்டு ஏனம்மா பறந்தீர்கள்?*
*நடமாடும் வீட்டில் படமாகிப் போன எம் தேவியே*
*உமக்கு இன்று ஓராண்டுத் திவசம் - உன்படத்துக்கோ*
*இன்று ஆத்ம சாந்திப் பூசை...*
*இதனைச் செய்யவா நாம் பிறந்தோம்*
*உன் சிரித்த முகம் காணாமல் பரிதவிக்கின்றோம்!*
*மறுபிறப்பென்பது மானுட உண்மையென்றால்*
*மறுபடியும் பிறந்திடுங்கள் எங்களுடன்*
*இல்லையேல் அழைத்திடுவாய் உன்னருகே!*

*4ஆம் வட்டாரம், புங்குடுதீவு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## 'படுமுட்டாள்தனமான நடவடிக்கை!' பல தரப்பிலும் இப்படித்தான் விமர்சனம்

கொழும்பு தங்குமிட விடுதிகளில் இருந்து ஈழத் தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றும் இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினரின் அடாவடித் தனமான நடவடிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றமே இடைக்காலத் தடை விதித்து விட்டிருக்கின்றது.

இவ்விவகாரத்தில் தமிழருக்கு ஆதரவான பச்சாதாப உணர்வு இனம், மொழி, மதம் கடந்து இலங்கைத்தீவு முழுவதும் ஒரே சமயத்தில் பீறிட்டுப் பிறந்திருப்பதையும் உணர முடிகின்றது.

இத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு அரசின் பாதுகாப்புத்துறை மேற்கொண்ட தீர்மானம் குறித்து இலங்கையின் எந்தத் தரப்பிலிருந்தும் - எந்தப் பக்கத்திலிருந்தும் - எந்தத் தலைவர்களிடமிருந்தும் - வந்த ஒரே கணிப்பு இது தான்:- ''இது ஒரு முட்டாள் தனமான முடிவு'' - என்பதே அது.

அரசுக்கு ஆதரவாக இதுவரை செயற்பட்ட ஜே.வி.பியில் தொடங்கி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புளொட் என சகல கட்சிகளினதும் தலைவர்களும் வீ. ஆனந்த சங்கரி போன்றோரும் கூட இந்த நடவடிக்கையை ஒரே சொல்லில் 'முட்டாள் தனமான நடவடிக்கை' என்றே விமர்சித்திருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வக்கில்லாத கொழும்பு அரசு, கூட்டுக் குற்றப் பொறுப்பாக முழுத் தமிழினம் மீதும் அதைச் சுமத்தி, ஓர் இன ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்தமை படு முட்டாள் தனம் என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமிருக்க முடியாது என்பது தெளிவு.

அதுவும் காலையில் நாடாளுமன்றம் கூடவிருக்கையில் முதல்நாள் இரவு இத்தகைய கொடூரத்தை மேற்கொள்ளத் தீர்மானித்த பாதுகாப்பு அதிகாரிகள் நிச்சயமாக புத்தி சாதுரியமற்றவர்கள்தான்.

ஏற்கனவே, புறக்கோட்டைப் பகுதி விடுதி உரிமையாளர்களை அழைத்து, அந்த விடுதிகளில் தங்கியுள்ள தமிழர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று வாயளவில் பொலிஸார் எச்சரித்த போதே அதற்குக் கடும் எதிர்ப்புத் திரண்டு எழுந்தது. அதைக் கண்டு, தமது கடும் நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கி புதுக்கதை - விளக்கம் - அவிழ்த்து விட வேண்டியவர்களானார்கள் பொலிஸார். அப்போதே சரியான பாடத்தைப் படித்து நிலைமையை ஊகித்தறிந்திருக்க வேண்டும் பாதுகாப்புத் தரப்பினர். தவறிவிட்டார்கள்.

நிலைமையைப் புரிந்துகொள்ளும் சாதுரியமற்ற அதிகாரிகளை உயர்மட்டத்தில் அரவணைத்துக்கொண்டிருப்பதன் பலனை அதிபர் மஹிந்தரின் நிர்வாகம் இப்போது அனுபவிக்கின்றது.

பௌத்த - சிங்களப் பேரினவாதக்கட்சி என அடையாளப்படுத்தப்பட்ட ஜே. வி. பியே இன்று அதற்கு வெளியே வந்து நின்று கொண்டு, மஹிந்தரின் அரசை நோக்கிக் குற்றச்சாட்டு விரலை நீட்டி, இன ஒதுக்கலை மேற்கொள்ளும் கொடூர அரசு இது என விமர்சிக்கும் விநோத நிலைமை.

சர்வாதிகாரி ஹிட்லரின் இனவெறிப் போக்கோடு மஹிந்தரின் ஆட்சி நிர்வாகத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒப்பிடும் அளவுக்கு விபரீதம்.

அரசில் அங்கம் வகிக்கும் இ. தொ. கா., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியன மேலக மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் சேர்ந்து 'இனக்கொடூர அரசு' என்று அரசுத் தலைமைக்கு நாமம் சூட்டும் கேவலம்.

இதுவரை சிங்கள அரசுகளின் தமிழ்த் தேசிய விரோதப் போக்குக்கு முட்டுக் கொடுத்து வந்த ஆனந்தசங்கரி, 'புளொட்' கட்சி போன்ற தரப்புகள் கூட தாங்கிக் கொள்ள முடியாமல் மஹிந்த அரசைக் கேவலத்துடன் பார்த்துச் சீறும் பரிதாபம்.

சர்வதேச தொண்டர் அமைப்புகள், ஐ. நா. செயலணிகள், மனித உரிமைகள் இயக்கங்கள் மற்றும் இராஜதந்திரிகள், சர்வதேசப் பிரமுகர்கள் என சர்வதேச மட்டத்தில் கொழும்பு அரசை இன ஒதுக்கல் நிர்வாகமாகக் கணிக்கும் ஏளனம்.

ஆக, பௌத்த - சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும், அரசுப் பங்காளிக் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் (அது கூட இப்பத்தி எழுதப்படும் இக்கணம் வரையே) இவ்விடயத்தில் கொஞ்சம் பொறுமை காத்து, அரசுத் தலைமைக்கு நெருக்கடி தராமல் ஒதுங்கி நிற்கின்றன. ஏனைய எல்லாத்தரப்புகளும் அரசுத் தலைமை மீது பாயும் நிலைமையை இந்த நடவடிக்கை ஏற்படுத்தி விட்டது. - அதுவும் கொடூர இன ஒதுக்கல் குற்றச்சாட்டுடன்.

பாதுகாப்புத் தலைமையின் இந்த இன ஒதுக்கல் கொடூரப் போக்கு சிரேஷ்ட அமைச்சர்கள் பலரையே சினத்துக்குள் ஆழ்த்திவிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. இந்த முட்டாள் தனமான முடிவுக்கு ஆதரவளிக்கவோ, அதை நியாயப்படுத்தவோ பல அமைச்சர்கள் முன்வரவேயில்லை என்பதும் குறிப்பிட்டுக் கூறத்தக்கது.

ஆக -

அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளமைபோல - 1983 ஜூலைக் கலவரத்தினால் ஏற்பட்ட கெட்ட பெயரை விட மோசமான அபகீர்த்தியை, பாதுகாப்புத் தரப்பின் இந்த இன ஒதுக்கல் நடவடிக்கை ஒரே இரவில் ஏற்படுத்தி விட்டது என்பதுதான் உண்மை. 1983 ஜூலைக் கலவர நிலையை விட மோசமான அவப் பெயரை கொழும்பு அரசுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது இந்தப் படு முட்டாள் தனமான நடவடிக்கை.

இந்தச் செயற்பாடுகள் மீண்டும் ஒரு விவகாரத்தை உறுதிப்படுத்தியிருக்கின்றன. இந்த அரசுத் தலைமை ஆட்சி அதிகாரத்துக்கு ஏன் வரவேண்டும் எனத் தமிழர் தரப்பு எதிர்பார்த்ததோ அது ஒழுங்காகவே அரங்கேறுகின்றது என்பது தான் அந்த அம்சம்.

மீண்டும் கூறுகிறோம். எது நடக்க வேண்டுமோ, அது நன்றாகவே நடக்கின்றது. அதை வழிப்படுத்துபவர்கள் கனத்த 'பாராட்டுக்கு' உரியவர்கள்!

# லிப்டன் சதுக்கத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜூன் 09

கொழும்பு நகரில் இருந்து அப்பாவித்தமிழர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றிய அரசின் செயலைக் கண்டித்து நேற்று கொழும்பு - லிப்டன் சதுக்கத்தில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. இதனை மேலக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது.




நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டத்தில் 'கொழும்பில் தமிழ் மக்கள் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவோம்', 'தமிழர்களாகிய எங்களை விரட்டாதீர்' போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பல நூற்றுக்கணக்கானோர் திரண்டு வந்து கலந்து கொண்டனர்.

மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, வாழ்க்கைத்தொழில்துறை பிரதி அமைச்சர் இரா தாகிருஷ்ணன், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப் பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சிவ சக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம், பத்மநாதன், கிஷோர் ஆகியோரும் மகளிர் அமைப்பின் தலைவி நிமால்கே பெர்னாண்டோ, கொழும்பு மாநகரசபை உறுப்பினர் குருசாமி மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், காணாமல் போனோரைத் தேடியறியும் குழுவின் பிரதிநிதிகள் உட்படப் பொதுமக்களில் ஏராளமானோரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் மக்கள் பலர் தமது உணர்வுகளை ஆக்ரோஷமாக வெளிப்படுத்தினர். சுமார் ஒருமணித்தியாலம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாகக் கலைந்துசென்றனர். (சி)

## உணவு விநியோகம்: இன்று கலந்துரையாடல்.

யாழ்ப்பாணம், ஜூன் 9

குடாநாட்டில் உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற உள்ளது.

இக்கலந்துரையாடலில் ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், நுகர்வோர் பாதுகாப்புச் சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (அ-1)

## மறியல் போராட்டம் நேற்று விஸ்தரிப்பு

வெளி மாவட்டங்களில் பணி புரிந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமக்கு இங்குள்ள பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு வழங்குமாறுகோரி நடத்திவரும் மறியல் போராட்டம் தொடருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கல்விவலயம் முன்பாக நான்காவது நாளாக நேற்றும் அவர்களின் மறியல் போராட்டம் நடைபெற்றது.

நேற்று யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் முன்பு மறியல் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

இதனால் திணைக்களக் கடமைகள் முற்றாக செயலிழந்தன. கடமைக்கு வந்த அலுவலர்கள் திரும்பிச் சென்றனர். (அ-203-111-75)

## கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு யாழ். மனித உரிமை ஆணைக்குழு கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

கொழும்பில் உள்ள தங்கு விடுதிகளில் (லொட்ஜ்களில்) இருந்து தமிழ் மக்கள் நேற்றுமுன்தினம் காலை பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சம்பவத்தை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக உடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ் மக்கள் கொழும்பில் நிம்மதியாக நடமாடக் கூடிய சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு ஆவன செய்யுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்திடம் யாழ். அலுவலகம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இதற்கான கடிதம் ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்திருந்தது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பில் 'லொட்ஜ்'களில் தங்கியிருந்த தமிழர்கள் நேற்றுமுன்தினம் காலை திடீரென அச்சுறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இது மிகப் பெரிய மனித உரிமை மீறும் செயலாகும்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஒரு நிம்மதியற்ற சூழலுக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தமது தேவைகளின் நிமித்தமே அவர்கள் கொழும்பு சென்று அங்குள்ள 'லொட்ஜ்'களில் தங்கி நிற்கின்றனர். அவர்களை இவ்வாறு அச்சுறுத்தி வெளியேற்றுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இது தமிழர்களைத் தலைநகரில் இருந்து வெளியேற்றுவதற்கான திட்டமிட்ட முயற்சியாகும்.

எனவே இது விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு தமிழ் மக்கள் நிம்மதியாக நடமாடக் கூடிய ஒரு நிலை தோற்றுவிக்கப்படவேண்டும் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ-50)

## தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் இன்று விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

தெல்லிப்பழையில் இயங்கும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ். அரச அதிபர் கே. கணேஷ் பிரதம விருந்தினராகவும் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே. நந்தகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி என். ஜெயக்குமரன் 'யாழ். மாவட்டத்தில் புற்றுநோய் சிகிச்சை சேவைகள்' தொடர்பான விளக்க உரை வழங்கவுள்ளார். (அ-203)

# பலவந்த வெளியேற்றம் அரசின் இனச்சுத்திகரிப்பே

## விடுதலைப் புலிகள் கண்டனம்

கொழும்பு, ஜூன் 09

மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துமாறு அனைத்துலக சமூகம் குரல் கொடுத்து வரும் நிலையில் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையை ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுள்ளது.

தமிழ் மக்களைத் தலைநகர் கொழும்பிலிருந்து பலவந்தமாக வெளியேற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மனித உரிமை விவகாரங்களுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா அரசால் கொழும்பு நகரில் வசித்து வந்த தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு திருப்பி அனுப்பியமையானது இனப்படுகொலையின் மற்றொரு செயற்றிட்டமும் பாரிய மனித உரிமை மீறலுமாகும். கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஸ்ரீலங்கா அரசுகளால் தமிழ் மக்கள் இத்தகைய ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இலங்கைத் தீவின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி இலங்கையில் விவாதித்துக் கொண்டிருக் கும்போது இத்தகைய செயற்பாட்டை ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுள்ளது. தமிழ் மக்களின் மனித உரிமைகள் தொடர் பான ஸ்ரீலங்கா அரசின் உண்மையான நிலைப்பாட்டை அனைத்துலக சமூகம் புரிந்தி ருக்கும்.

நோயாளர்கள், இளையோர் மற்றும் முதியோரை கொடூரமாக தங்கள் வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றியிருக்கும் இந்தப் பாரிய மனித உரிமை மீறலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## பரமேஸ்வரக் குருக்கள் நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ஏனைய குருகுல அமைப்புக்களுடன் இணைந்து நடத்தும் சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று சனிக்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் ஆனைப்பந்தியில் உள்ள குருகுலத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஸ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவுப் பேருரைகள், 'முகூர்த்த நிர்ணயம்' என்ற நூலின் வெளியீடு ஆகியன இடம்பெறவுள்ளன. (அ-1)

## குடி தண்ணீர் விநியோகம் இரு தினங்கள் தடைப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 9

குருநகர் நீர்த் தாங்கியிலிருந்து மக்களுக்கு வழங்கப்படும் குடி தண்ணீர் விநியோகம் இன்றும் நாளையும் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

குடி தண்ணீர் வழங்கும் குழாயில் ஏற்பட்ட சேதம் காரணமாக விநியோகம் தடைப்பட்டுள்ளது என்றும், திருத்த வேலை முடிவடைந்ததும் வழமையான நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 27 | ஞாயிற்றுக்கிழமை 10.06.2007 |
| திதி : தசமி | முன்னிரவு 08.48 |
| நட்சத்திரம் : | உத்திரட்டாதி அமிர்தசித்தம் |
| சுபநேரம் | : 08.52 - 10.22 |
| ராகுகாலம் | : 04.22 - 05.52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

புங்குடுதீவு, தொண்டர் திருநாவுக்கரசு முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி சு.சுபாஜினி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

* * *

புத்தூர் மேற்கு விடிவெள்ளி முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (203)

# இலங்கைக்கு நிதி உதவியை நிறுத்துமாறு அகாஷியிடம் தமிழ்க் கூட்டமைப்பு வற்புறுத்து

கொழும்பு, ஜூன் 9

யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக ஜப்பான் வழங்கும் நிதியுதவியை நிறுத்துவது குறித்து ஆலோசிக்கவேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு ஜப்பானின் இலங்கைக்கானவிசேட தூதுவர் யசூசி அகாஷியைச் சந்தித்தபோது கேட்டுக்கொண்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் நேற்றுமாலை 2.30 மணிக்கு யசூஷி அகாஷியை கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தில் சந்தித்தனர்.

சுமார் ஒரு மணிநேரம் நீடித்த இச் சந்திப்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், எம்.பிக்களான சுரேஷ் பிரேமச் சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தங்கேஸ்வரி கதிர்காமநாதர், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பின்போது கூட்டமைப்பு எம்.பிக்கள் தற்போதைய நிலமையை அகாஷியிடம் விளக்கினர்.

ஆளும் கூட்டணியின் முக்கிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகள் யுத்தத்தை முன்னெடுக்கவே வழிகோலும். இந்த ஆலோசனைகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளினை எந்த வகையிலும் நிறைவேற்றுபவையாக இல்லை.

இலங்கை அரசு தீர்வுத்திட்டத்தை முன்னோக்கும் எனத் தெரிவித்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றிக்கொண்டு யுத்தத்தின்மூலம் தீர்வுகாண்பதிலேயே முனைப்பாக உள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதி ஆகியோர் கிழக்குப் பிரதேசத்தை புலிகளிடம் இருந்து மீட்டதுபோல் வடக்கையும் புலிகளிடமிருந்து மீட்போம் என பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றனர்.

அரசு உள்நாட்டு வருமானம் மூலம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்துகொண்டு வெளிநாட்டு நிதிமூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டால் அபிவிருத்தி வேலைகள் தடைப்படும். தடைப்பட்டாலேயே சிங்கள மக்கள் அரசிடம் கேள்வி எழுப்புவார்கள்.

எனவே, இந்த நிலையை உருவாக்குவதென்றால் இலங்கைக்கான வெளிநாட்டு நிதியுதவிகள் நிறுத்தப்படவேண்டும். இலங்கைக்கு வழங்கும் மனிதாபிமான உதவிகளை நிறுத்தும்படி நாங்கள் கேட்கவில்லை.

அரசு வெளிநாடுகளுக்கு வாய்மூலம் பல வாக்குறுதிகளை வழங்கிவிட்டு யுத்த முன்னெடுப்புக்களிலேயே கவனம் செலுத்துகின்றது. யுத்தத்தையும் அபிவிருத்தியையும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கமுடியாது.

வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி என்ற பெயரில் புதிய கட்டடங்களை நிர்மானித்தால் அங்கு குண்டுவீச்சு நடைபெறாதென்ற உத்தரவாதமும் இல்லை. எனவே, ஜப்பான் அரசு இலங்கைக்கு நிதியுதவி வழங்குவது குறித்து ஆலோசித்து அதை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் கேட்டுக் கொண்டனர்.

அரசு பேச்சுக்கான எதுவித நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை. சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் யுத்த ஆயுதங்கள், உபகரணங்களை வழங்கிவருகின்றன. என்றும், எம்.பிக்கள் அகாஷியிடம் தெரிவித்தனர்.

### அகாஷி கருத்து

ஜே.வி.பியினரிடம் பேச்சு நடத்தினர் என்றும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அவர்களது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். மக்கள் அங்கீகரிக்கும் தீர்வை தான் ஏற்றுக்கொள்வதாகவும் ஜே.வி.பியினர் தெரிவித்தனர் என்று அகாஷி கூறினர் எனக் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்தனர்.

## பஸ் நடத்துநரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கி சேவையில் ஈடுபடும் பஸ்கள் அனைத்தும் நேற்றுமாலை கோண்டாவில் டிப்போவுக்கு வந்து சேர்ந்து விட்டன என்று போக்குவரத்து சபை அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

புங்குடுதீவு, மடத்துவெளிப் பகுதியில் பஸ் ஒன்று பழுதடைந்தது. அது குறித்து தலைமையகத்துக்கு தகவல் கொடுப்பதற்காகச் சென்ற வேளை பஸ் நடத்துநரான பிரதீபன் காணாமற் போனார் என்றும் -

இவரை விடுவிக்குமாறு கோரி போக்குவரத்துச்சபை ஊழியர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## தமிழரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிணக்கம் ஒன்றை எட்டுவதற்கான முக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இச் சமயத்தில் இத்தகைய நடவடிக்கைகள் இனப்பிளவை மேலும் ஆழமாக்கவே செய்யும்.

கொழும்பிலிருந்து தனது மக்களைப் பலவந்தமாக வெளியேற்றுவதை உடன் நிறுத்தி, ஏற்கனவே வெளியேற்றப்பட்டவர்கள் கொண்டுசெல்லப்பட்டுள்ள இடங்களைப் பகிரங்கப்படுத்தி, அவர்களின் பாதுகாப்பையும் நலனையும் உறுதிப்படுத்துமாறு நாம் அரசைக் கோருகின்றோம். - என்று உள்ளது. (சி)

## சக்தி வாய்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் 9.10 மணியளவில் சிவிலியன் ஒருவர் மாளிகாவத்தைப் பொலிஸாருக்கு கொடுத்த தகவலின் பின்னர் நடத்திய தேடுதலின்போது மின் கம்பம் ஒன்றின் அருகில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இக் குண்டு கண்டெடுக்கப்பட்டது என மாளிகாவத்தைப் பொலிஸ் அத்தியட்சகர்தெரிவித்தார்.

விசேட பொலிஸ் அதிரடிப்படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் உடனடியாக அழைக்கப்பட்டு அக்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகளே இந்தக் குண்டை அங்குபொருத்தியிருக்கின்றனர்என்று இராணுவம் குற்றஞ்சாட்டி யிருக்கிறது. (சி)

## தமிழரை கொழும்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர்களுள் ஒருவர், இவ்வாறு தமிழர்களைப் பலவந்தமாக விடுதிகளில் இருந்து அகற்றும் நடவடிக்கை முட்டாள்தனமான ஆலோசனையின்பேரில் முன்னெடுக்கப்பட்டது போலும் என்று குறிப்பிட்டார்.

இத்தகைய அத்துமீறல்களுக்கு எதிராக நீதிமன்றம் தானாகவே தலையிட்டு தடை உத்தரவைப் பிறப்பிக்க முடியும் என மற்றொரு நீதியரசர் குறிப்பிட்டார்.

மனு மீதான விசாரணையை எதிர்வரும் 22 ஆம் திகதிக்குத் தள்ளிவைத்த நீதி யரசர்கள், அதுவரை கொழும்பில் உள்ள தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றவும், கொழும்புக்கு வரும் தமிழர்களை வழியில் தடுக்கவும் நடவடிக்கை ஏதும் எடுக்கக் கூடாது என்று பொலிஸ் மா அதிபருக்கும் ஏனைய எதிர் மனு தாரர்களுக்கும் உத்தரவிடுமாறு பணிப்புரை விடுத்தனர். (சி)

## நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழர்கள் வெளியேற்றப்பட்டமையை கண்டித்து ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. (சி)

## சிறுநீரக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'விடுங்கோ விடுங்கோ' எனக் கதறி அழுத போதிலும் அந்த நோயாளியை தள்ளிச் சென்று பஸ்ஸில் ஏற்றியிருக்கின்றனர் பொலீஸாரும் படையினரும்.

பலவந்தமாக ஏற்றிச் செல்லப்பட்ட தமிழர்கள் தாம் அணிந்திருந்த உடையுடனே உடனடியாக பஸ்ஸில் சென்று ஏறுமாறு மிரட்டப்பட்டனர். உடைகளை மாற்றிக் கொள்ளக்கூட அவகாசம் தரவில்லை. அவர்கள் தமது இயற்கைக் கடன் களைச் செய்துவிட்டுப் புறப்படுவதற்குக் கூட நேர அவகாசம் வழங்கப்படவில்லை என்று கண்கண்ட சாட்சிகள் பலரும்சர்வ தேசசெய்தி நிறுவனம்ஒன்றுக்குத்தெரிவித்திருக்கின்றனர்.

ஜேர்மனியில்ஹிட்லரின்காலத்தில்அவர் யூதர்களுக்கு எதிராக நடத்திய இனச் சுத்திகரிப்பையே, தமிழர்கள் பலவந்தமாக கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்ட அரசின் நடவடிக்கை ஒத்திருப்பதாக பிரதான எதிர்க்கட்சியானஐக்கியதேசியக் கட்சி கண்டனம் தெரிவித்திருகிறது. (அ)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் லொட்ஜ்களில் தங்கிருந்த தமிழர்களை பலவந்தமாக வெளியேற்றுவதை நிறுத்துமாறு உயர் நீதிமன்றம் தடைவிதித்தமை மற்றும் அமெரிக்கா உட்பட சர்வதேச மட்டத்தில் வெளியான கண்டனங்களின் பின்னரே ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டது.

இதேவேளை -

உயர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து தாம் ஏற்படுத்திய பாதிப்புக்குப் பரிகாரம் செய்யும் வகையில் கொழும்பிலிருந்து வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்ற தமிழர்களை மீண்டும் கொழும்புக்கு அழைத்து வரும் ஏற்பாடுகளை செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் பொருட்டு நேற்றுப் பிற்பகல் ஐந்து பஸ்களை ஒழுங்கு செய்திருப்பதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியாவில் முகாமில் தங்கவைக்கப்பட்ட 272 பேரில் 186 பேரை கொழும்புக்கு அழைத்து வருவதற்கான ஒழுங்குகள் பூர்த்தி அடைந்துவிட்டதாக நேற்று மாலை அங்கிருந்து அறிவிக்கப்பட்டது.

இதேவேளை-தமிழர்கள்எவரும்பலவந்தமாகக்கூட்டிச்செல்லப்படவில்லை என்றும் அவர்கள் தமது சொந்த விருப்பத்திலேயே பஸ்களில் ஏறிச்சென் றார்கள் என்றும் பாதுகாப்புத் துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வல மறுத்திருக்கிறார். (அ)

## குடும்பிமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லப்பட்டனர். மேலும் இரு படையினர் மட்டக்களப்பு வைத்திய சாலைக்கும், மற்றிருவர்மகாஓயா வைத்திய சாலைக்கும் கொண்டு செல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## அழகிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்பது சடலங்கள் வரை அப்பகுதியில் இருக்கின்றன என்று பொலிஸார் முதலில் தெரிவித்தனர். எனினும் அப்பகுதியில் மேலும் சடலங்கள் இருக்கக்கூடும் என்று சந்தேகிக் கப் படுவதால் தேடுதல் பணிகள் நேற்று இரவு வரையும் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இதேயிடத்தில் பல சடலங்கள் ஒன்றாக மீட்கப்பட்டிருப்பது வென்னப்புவ பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (சி)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பகல் 12.20 மணிக்கும் - இருதடவைகள் - ஒரே இடத்தில் விமானங்கள் குண்டுகளை வீசித்தாக்கின என்று கூறப்படுகிறது.

இதனால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை. ஆனால், கிளிநொச்சி நகரிலும் ஏனைய பகுதிகளிலும் பொதுமக்களின் இயல்புவாழ்க்கை பெரும் குழப்பத்துக் குள்ளாக்கியது.


## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபகவதிஅம்மாள் சிதம்பரநாதன்



கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திருமதி அன்னபகவதிஅம்பாள் சிதம்பரநாதன் 08.06.2007 வெள்ளிக்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் சரசாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா சிதம்பரநாதனின் அன்பு மனைவியும், அருந்ததிதேவி, காலஞ்சென்ற இரவீந்திரநாதன், கணநாதன், ஜெயதேவி ஆகியோரின் அன்புத் தாயும் திருநாவுக்கரசு, சிவஜோதி, திருவருட்செல்வன் ஆகியோரின் அன்பு மாமியும் திருமகள் - முகுந்தன் (ஆஸ்ரேலியா), காயத்திரி - வாகீசன் (கனடா), நிரந்தரி, மாதங்கி, ரிஷிகேசன், நிருத்தியா ஆகியோரின் அன்புப் பேத்தியும் கேசன்யாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் C3/1, அன்டர்சன் தொடர்மாடியில் வைக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை 10.06.2007 காலை 7 மணிக்கு 'பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் கிரியைகள் நடைபெற்று, 9.30 மணிக்கு தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C3/1, அன்டர்சன் தொடர்மாடி.
நாரஹேன்பிட்டிய. (2597963)

தகவல்:
சி.கணநாதன் (பொபி),
திருமதி அ.திருநாவுக்கரசு,
திருமதி ஜெ.திருவருட்செல்வன்
(பிள்ளைகள்).

**நாளை ஆரம்பம்**
கணக்கீடு
திரு.P.பகீரதன்
A/L 2008
பங்குடமை
Sat, Sun 12 - 1
A/L 2009
தனிவியாபார முடிவுக் கணக்கு
Sat, Sun 8
விக்னா கல்வி நிறுவனம்

**GEOGROPHY**
A/L 2008, 2009
By:J.Jeyaganesh
2008
மானிடப்புவியியல்
2009
சூழல் புவியியல்
BRAIN POWER INSTITUTE

**பல மாணவர்களின் வேண்டுகோளின்படி**
புவியியல்
திரு.J.ஜெயகணேஸ்
தரம் 10, 11
சனி பி.ப 1-2
ஆரம்பம் : 09.06.2007
*தனிப்பாட அனுதியுண்டு
*கடந்தகால வினாத்தாள் செய்து முடிக்கப்படும்.
BRAIN POWER INSTITUTE
தொலைபேசி 0777 730596

**கமரா உடன் தேவை**
டிஜிற்றல் கமரா உடனடியாகத் தேவை. கமராவின் தரம், விலை விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.
**0714115002**

**அறிவொளி நல்லூர்**
CHE அன்பழகன்
ORGANIC
ஆரம்பம்:
11.06.2007 Mon 4 p.m.
A/L09, Sat, Sun 3.30 p.m.
C.Maths ஸ்ரீதரன்
A/L09, Sat, Sun 3.15 p.m.
சிங்கள வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பிரபல அனுபவ ஆசிரியர்
M.சொலமன்
Tue, Wed 4 p.m., Sat 7 a.m

**A/L 2007 சகல துறைகளுக்குமான**
பொதுச்சாதாரண பரீட்சை
வழிகாட்டி நூல் விற்பனையில்
தொகுப்பு: தவசேகர் **விலை 150/=**
ஆசிரியரின் வகுப்புகளிலும், பிரபல புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.

**வெளிவந்துவிட்டது**
வரலாறு தரம்10
(புதிய பாடத்திட்டம்)
* பாடசாலை கணிப்பீடுகள்
* விளக்கப் படங்கள்
* வினா - விடை அமைப்பு முறை
ஆசிரியர்: R.S. சந்திரன்
கிடைக்குமிடங்கள் பூபாலசிங்கம் உட்பட
யாழ்.நகரின் பிரபல புத்தக சாலைகள்
ஐடியல் அக்கடமி சண்டிலிப்பாய்,
எடிசன் அக்கடமி யாழ்ப்பாணம் 021 222 2712
தொடர்பு: ஞானம்ஸ் பிறிண்டேர்ஸ், கந்தர்மடம் சந்தி.

**Sky Computer System**
No 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Hot-line: 021 222 9109
New Arrival
HP Laserjet 1020
Viewsonic Monitor 15"
UPS Power Tree 650VA
ATX Casing
DVD Writer (Samsung)
DVD Writer (Sony).
Combo Drive (Samsung).
Epson Printer (Lq300+II).
Hp Printer (DeskJet )
Scanner Canon LIDE25
Kingston DDR 256MB
Elash Drive 2GB(Kingston)
Samsung Hard Disk80GB SATA
Samsung Hard Disk80GB IDE
Mother Board Asus (LGA)
Mother Board Mercury (478)
HP Toner 12A (1020)
P4 Power Supply
ஞாயிறு திறந்திருக்கும்
கச்சேரிக்கு அருகில்

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(செட்டியார்)

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவஞானசுந்தரம் (செட்டியார்) நேற்று (08.06.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

144/9, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இளங்கோ (மகன்).


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன்(பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org